අභ්‍යන්තර හා ස්වදේශ කටයුතු සහ පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Internal & Home Affairs and Provincial Councils & Local Government

පළාත් සභා හා පළාත් පාලන අංශය
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரிவு
Provincial Councils & Local Government Division

# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
# வருடாந்த செயல்திறன் அறிக்கை
# Annual Performance Report
# 2018

# உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரிவு

# வருடாந்த செயல்திறன் அறிக்கை - 2018

# உள்ளடக்கம்


**செயற்சாதனை - 2018**

**1. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற் ஒழுங்கமைப்புப் பின்னணிகள் 7**

1.1. நோக்கு மற்றும் பணிக்கூற்று 9

1.2. விடயப் பரப்புக்கள் மற்றும் செயற்பாடுகள் 10

1.3. கொள்கை மற்றும் மூல உபாயத் திட்டங்கள் 11

1.4. பிரிவுகள் மற்றும் நிறுவனங்கள் 12

**2. செயற்சாதனைச் சுருக்கம் - 2018 13**

2.1. நிதிச் சுருக்கம் 15

2.2. பௌதீக செயற்சாதனை சுருக்கம் 16

**3. அமைச்சின் பிரிவுகள் மற்றும் நிறுவனங்களின் செயற்சாதனைகள் 21**

3.1. அபிவிருத்திப் மற்றும் பயிற்றுவிப்பு பிரிவு 23

3.1.1. அபிவிருத்தி பிரிவு 23

3.1.2. பயிற்றுவிப்பு பிரிவு 27

3.2. செயற்திட்டங்கள் மற்றும் திட்டமிடல் பிரிவு 28

3.2.1. பிரதான பணிகள் 28

3.2.2. வெளிநாட்டு நிதியத்திற்கமைய அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் 29

3.3. தேசிய திண்மக்கழிவு முகாமைத்துவ உதவியாளர் மத்திய நிலையம் 41

3.4. உள்ளூராட்சி மன்றப் பிரிவு 44

3.5. மாகாண சபைப் பிரிவு 50

3.6. சட்டப் பிரிவு 53

3.7. நிருவாகப் பிரிவு 54

3.8. நிதி பிரிவு 56

3.9. செலவின கண்காணிப்புப் பிரிவு 59

3.10. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு 62

3.11. உள்ளூராட்சி ஆளுகை தொடர்பான இலங்கை நிறுவகம் 64

3.12. உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் 70

# செயற்குழுச் சுருக்கம்

இவ்வறிக்கையினூடாக உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் விசேடமாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விடயப் பரப்பிற்குரியதாக 2018 ஆம் ஆண்டினுள் செயற்படுத்தப்பட்ட அனைத்து உள்நாட்டு வெளிநாட்டு வேலைத்திட்டங்களினதும் மற்றும் வகுக்கப்பட்ட கொள்கை வழிகாட்டல்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டங்கள் ஆகியவற்றின் செயலாற்றுகை அமைச்சின் ஒவ்வொரு பிரிவின் கீழும் விபரமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய நாட்டின் சகல மாகாண சபைகளை போன்று மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களையும் தொடர்புபடுத்தி கொள்ளைகள் உட்பட வழிகாட்டல் ஆலோசனைகளை வகுத்தல், தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் மாகாண சபை உட்பட நிரல் அமைச்சுகளுக்கிடையிலான இணைப்பும் மிகவும் பயன்மிக்கதாக முன்னெடுக்க முடிந்தது.

2018 ஆம் ஆண்டு உள்நாடு மற்றும் வெளிநாட்டு செயற்திட்டங்கள் உட்பட 60,423 மில்லியன் ரூபா பெறுமதி கொண்ட அபிவிருத்திச் செயற்திட்டங்களை அனைத்து மாகாணங்களையும் தழுவக்கூடியதாக அமுல்படுத்த முடிந்தது. இச் செயற் திட்டங்களுக்கிடையே மாகாண வீதிகள், கிராமிய வீதிகள், கிராமியப் பாலங்கள், உள்ளூராட்சி மன்ற அலுவலகங்கள், பல்செயற்பாட்டுக் கட்டடங்கள், வாராந்த சந்தைகள், சந்தைக் கட்டடத் தொகுதிகள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் சிறுவர் பூங்காக்கள், வைத்திய சிகிச்சைக் கட்டடங்கள், ஆயுள்வேத மத்திய நிலையங்கள், பஸ்தரிப்பு நிலையங்கள், கால்வாய்த் தொகுதிகள், குடிநீர் வழங்கல் திட்டங்கள் மற்றும் மயானங்கள் போன்றவைகள் முக்கியமானதாகும். இச் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் சமநிலையான பிரதேச அபிவிருத்தியினை உருவாக்குவதற்கு அடித்தளம் இடப்பட்டுள்ளமை தெளிவாகின்றது.

மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் துறையின் கொள்கைகள் உட்பட வழிகாட்டல் ஆலோசனைகளை வகுப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்துவதற்கு அமைச்சுக்கு முடிந்துள்ளது. இதற்கமைய உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களினுள் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக தேவையான சட்டங்களை வகுத்தல், மாகாண சபை உறுப்பினர்களுக்காக ஒழுக்க விழுமிய முறைமையை வகுத்தல், தோட்டத் தொழிலாளர்களின் நலன்புரிக்காக பிரதேச சபைச் சட்டத்தை மறுசீரமைத்தல், உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்காக சர்வதேச மற்றும் தேசிய தரங்களுக்கு ஏற்றவாறு கணக்கு முறைமை ஒன்றை அறிமுகப்படுத்தல் மற்றும் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களை கூட்டிணைத்தல் மற்றும் தரமுயர்த்துவதற்காக விஞ்ஞான முறை ஒன்றினை உள்ளடக்கிய விடயங்களை அடையாளப்படுத்தல் ஆகிய முக்கிய கொள்கைகளை அமுல்படுத்துவதற்கு தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டில் அதன் பெறுபேறுகளை அனுபவிப்பதற்கு மக்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும்.

2018 ஆம் ஆண்டில் அமைச்சின் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளை மிகவும் வினைத்திறனாக இலகுவாக மேற்கொள்வதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டல்கள் மற்றும் மாண்புமிகு இராஜாங்க அமைச்சர்கள் இருவரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற ஒத்துழைப்பும் செயலாளர், இராஜாங்க செயலாளர், மேலதிகச் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், உள்ளூராட்சி ஆணையாளர்கள் மற்றும் ஏனைய ஊழியர்களினால் வழங்கப்பட்ட பங்களிப்பு என்பன வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

# 1

# மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஒழுங்கமைப்புப் பின்னணிகள்

# 1.1. நோக்கு மற்றும் பணிக்கூற்று

## நோக்கு

வினைத்திறன், ஒத்துழைப்பைப் போன்று மக்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய உயர் மற்றும் பண்புசார் தரம்மிக்க சமூக சேவையினை வழங்கும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி முறையினை ஏற்படுத்தல்.

## பணிக்கூற்று

- ❖ மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற முறையினை விருத்தி செய்வதற்கான கொள்கைகள் உட்பட சட்டங்களை வகுத்தல்.

- ❖ மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கு அவற்றின் அதிகாரங்களைப் பயன்படுத்தி சேவைகளை வழங்குவதற்காக அவற்றின் இயலுமைகளை மேம்படுத்தல்.

- ❖ மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற முறை மூலம் மக்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்தல்.

- ❖ மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் உட்பட ஏனைய நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணி சகலரினதும் சுபீட்சத்திற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

# 1.2. விடயப் பரப்பு மற்றும் செயற்பாடுகள்

2018.12.28 ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமாணி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட புதிய அமைச்சுக்களின் விடயப் பரப்புக்கள் மற்றும் பணிகள் தொடர்பான அறிவித்தலுக்கமைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற பிரிவின் விடயப்பரப்புக்கள் மற்றும் பணிகள்.

- மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற விடயப்பரப்பு உட்பட உள்ளூராட்சி ஆளுகை தொடர்பான இலங்கை நிறுவகம் மற்றும் உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியம் ஆகிய நிறுவனங்களின் உரிய கொள்கைகள், வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை வகுத்தலும் பின்னூட்டல்களை மேற்கொள்ளல் மற்றும் மதிப்பிடுதல்.

- மாகாண சபைகளுக்குரிய பணிகளை மேற்பார்வை செய்தல்.

- மாகாண சபைகளின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்குப் பயிற்சியளித்தல்.

- உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்குரிய அரச பணிகளை முன்னெடுத்தல்.

- பொதுவசதிகளை விருத்தி செய்வதற்காக உள்ளூராட்சி ஆளுகை நிறுவனங்களுக்குக் கடன் வசதிகளை வழங்குதல்.

- உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்குப் பயிற்சியளித்தல்.

- மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற ஆளுகையின் சகல கோணங்கள் தொடர்பிலும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.

- உள்ளூராட்சி மன்றம் தொடர்பான இலங்கை நிறுவகம் மற்றும் உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிறுவகம் ஆகிய நிறுவனங்களுக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடங்களுக்குரிய பணிகள்.

- மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனங்களின் மேற்பார்வைப் பணிகளை மேற்கொள்ளல்.

# 1.3. கொள்கைகள் மற்றும் உபாயத் திட்டங்கள்

## கொள்கைகள் :

மாகாணங்களில் சுயமான உறுதியான செயற்பாடுகளை உறுதிப்படுத்தி சமமின்மைகளைக் குறைத்து மற்றும் மொத்தத் தேசிய உற்பத்திக்கு மாகாணங்களிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பினை விருத்தி செய்தல்.

## உபாயத் திட்டங்கள் :

1. நல்லாட்ச்சி மூல அம்சங்களைப் பின்பற்றி அந்தந்த மாகாணங்களில் காணப்படும் மானிட மூலதனம் மற்றும் சூழல் வளத்தை வினைத்திறனுடன் பயன்படுத்தி சகல மாகாணங்களுக்கும் வருமானத்தை ஈட்டும் இயலுமைகளை விருத்தி செய்தல்.

2. குடியேற்ற விகிதாசாரங்களுக்கிணைவாக உயரிய மட்டத்தில் காணப்படும் மாகாணங்களில் அம்மட்டத்தை மட்டுப்படுத்துவதற்காக மிகுந்த பொருத்தமான கொள்கைகள் மற்றும் நீண்டகால வேலைத்திட்டங்களை வகுத்தலும் அறிமுகப்படுத்தலும்.

3. நாட்டின் மொத்த சமூகப் பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு பங்களிப்பு வழங்குவதற்காக அவ்வவ் மாகாணங்களில் காணப்படும் மானிட வளப் பயன்பாட்டினை உறுதிப்படுத்தல்.

4. கீழ் மட்டத்திலிருந்து சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக சமூகப் பங்கேற்பினை விருத்தி செய்தல் மூலம் மாகாணங்களில் காணப்படும் வளங்களை நேரடிப் பயன்பாடு மற்றும் கிராமிய சமூகத்தின் இயலுமைகள் மற்றும் திறமைகளை வலுப்படுத்தல்.

5. ஒவ்வொரு மாகாணங்களிலும் காணப்படும் இயற்கை வளங்களை நிலையான செயற்பாட்டிற்கமையப் பயன்படுத்துவதினை உறுதிப்படுத்துவதுடன் அனர்த்த அபாயங்களைக் கட்டுப்படுத்தல் மற்றும் அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கான செயற்பாடுகளை பிரதேச மட்டத்தில் அபிவிருத்திச் செயற்பாடுகளுடன் கூட்டிணைத்தல்.

6. மானிட வள விருத்தி மற்றும் விஞ்ஞான அடிப்படைக்கமைய உள்ளூராட்சி மன்றங்களை மேம்படுத்துவதன் மூலம் பயன்மிக்க வினைத்திறன் கொண்ட மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற நிருவாக முறையினை உறுதிப்படுத்தல்.

# 1.4. பிரிவுகள் மற்றும் நிறுவனங்கள்

1. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சரின் அலுவலகம்
2. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சரின் அலுவலகம்
3. நிருவாகப் பிரிவு
4. அமைச்சின் செயலாளர் அலுவலகம்
    i. உள்ளூராட்சி மன்ற மறுசீரமைப்பு அலகு
    ii. முறைப்பாடுகள் மற்றும் தகவல் அலகு
5. மாகாண சபைப் பிரிவு
6. உள்ளூராட்சி மன்றப் பிரிவு
7. அபிவிருத்திப் பிரிவு
8. செயற்திட்டம் மற்றும் திட்டமிடல் பிரிவு
    i. செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு
    ii. திட்டமிடல் பிரிவு
    iii. தகவல் தொழில்நுட்பப் பிரிவு
9. சட்டப் பிரிவு
10. நிதிப் பிரிவு
11. செலவினக் கண்காணிப்புப் பிரிவு
12. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
13. தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ உதவி நிலையம்
14. ஊடகப் பிரிவு
15. உள்ளூராட்சி ஆளுகை இலங்கை நிறுவனம்

# செயற்சாதனைச் சுருக்கம - 2018

# 2

# 2.1. நிதிச் சுருக்கம்

## நிதிச் செயற்சாதனைகள் - 2018

| வேலைத்திட்டங்கள் | 2018 இற்கான மதிப்பீடு (ரூபா) | 2018.12.31 திகதியன்று செலவினம் (ரூபா) |
|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | **1,294,192,000** | **922,843,827** |
| தனிநபர் சம்பளம் கொடுப்பனவு | 161,792,000 | 146,443,556 |
| ஏனைய மீண்டெழும் செலவினம் | 1,132,400,000 | 776,400,271 |
| **மூலதனச் செலவினம்** | **16,800,203,000** | **14,139,638,918** |
| **மூலதனச் சொத்து புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி** | **20,200,000** | **14,850,061** |
| **மூலதனச் சொத்துக்களை பொறுப்பேற்றல்** | **7,000,000** | **5,824,842** |
| **உள்நாட்டு உதவி பெறும் செயற்திட்டம்** | **632,600,000** | **584,243,887** |
| **வெளிநாட்டு உதவி பெறும் செயற்திட்டம்** | **4,622,950,000** | **3,561,842,526** |
| | **11,517,453,000** | **9,972,877,603** |
| **முழு மொத்தம்** | **18,094,395,000** | **15,062,482,746** |

2018.12.31 ஆம் திகதி நிதி முன்னேற்றம் 83%

# 2.2. பௌதீக செயற்சாதனைச் சுருக்கம்

## அட்டவணை இலக்கம் 2 - பௌதீக செயற்சாதனை

| அபிவிருத்திப் பணிகள் / துறைகள் | | பணி நிறைவு |
|---|---|---|
| **மாகாண சபை / கிராமிய வீதி மற்றும் பாலம் அபிவிருத்தி** | | |
| 01 | அபிவிருத்தி செய்யப்பட்ட மாகாண வீதிகளின் தூரத்தின் அளவு | 10 கி.மீ |
| 02 | நிர்மானிக்கப்பட்ட மற்றும் மறுசீரமைக்கப்பட்ட கிராமிய வீதிகளின் தூர அளவு (தார், கொங்கிரிட், கிறவல்) | 314 கி.மீ |
| | கிராமிய வீதியின் கீழ் நிர்மானிக்கப்பட்ட பாலங்கள் / கால்வாய்களின் எண்ணிக்கை | 7 |
| | கிராமிய வீதியின் கீழ் நிர்மானிக்கப்பட்ட கட்டுமானங்களின் எண்ணிக்கை | 11 |
| 03 | நிர்மானிக்கப்பட்ட கிராமியப் பாலங்களின் எண்ணிக்கை (6 மீற்றர் தொடக்கம் 30 மீற்றர் வரை) | 1247 |

| நீர்ப்பாசன அபிவிருத்தி (இரணைமடு – கிளிநொச்சி) | | |
|---|---|---|
| 01 | பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட பிரதான கால்வாய்த் தொகுதிகளின் தூரத்தின் அளவு | 30 கி.மீ |
| 02 | பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட ஏனைய கால்வாய்த் தொகுதிகளைக் கொண்ட வீதிகளின் தூரத்தின் அளவு | 113 கி.மீ |
| 03 | கால்வாய்த் தொகுதிகள் ஊடாக நிர்மானிக்கப்பட்ட பாலம் / வாய்க்கால்களின் எண்ணிக்கை | 15 |
| 04 | இரணைமடு நீர்தேக்கத்தின் பிரதான அணைக்கட்டை உயர்த்தி நிர்மானித்தல் மற்றும் புணரமைப்புப் பணிகள் | 100% பணிகள் பூர்த்தி |
| 05 | இரணைமடு நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் மற்றும் குளக்கட்டு புணரமைப்புக்கள் | |
| 06 | இரணைமடு நீர்த்தேக்கத்தின் நீர் அலை பாதுகாப்பு அரண் (Rip Rap Protection) நிர்மானிப்பு | 100% பணிகள் பூர்த்தி |
| 07 | இரணைமடு உத்சான நீர்ப்பாசனத் திட்டத்தைப் புணரமைத்தல் | |

| கழிவு நீர்த் தொகுதியினைப் புணரமைத்தல் (கொழும்பு மாநகர சபை அதிகாரப் பிரதேசம்) | | |
|---|---|---|
| 01 | கடலுக்கு கழிவுநீர் வெளியேற்றப்படும் பிரதான நான்கு குழாய் மார்க்கங்கள் (U1, U3, T34, T36) புணரமைப்புக்கள் | 100% |
| 02 | கழிவு நீர் வெளியேற்றும் குழாய்த் தொகுதிகள் பொருத்தி முடிக்கப்பட்ட தூரத்தின் அளவு (M26) | 1.8 கி.மீ |
| 03 | கழிவு நீர்த் தொகுதியினைச் சுத்தப்படுத்தல் மற்றும் கழிவு நீர் அகற்றும் தொகுதியின் நிலைமைகளை ஆய்விற்குட்படுத்தல் CCTV மூலம் பூர்த்தி செய்யப்பட்ட தூரத்தின் அளவு | 100% பணிகள் பூர்த்தி |

| உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி | | |
|---|---|---|
| 01 | நிர்மானிக்கப்பட்ட / அபிவிருத்தி செய்யப்பட்ட வாராந்தச் சந்தைகளின் எண்ணிக்கை | 96 |
| 02 | நிர்மானிக்கப்பட்ட / அபிவிருத்தி செய்யப்பட்ட வர்த்தக மத்திய நிலைய எண்ணிக்கை | 38 |
| 03 | நிர்மானிக்கப்பட்ட / அபிவிருத்தி செய்யப்பட்ட சுற்றுலா கவர்ச்சிமிக்க இடங்களின் எண்ணிக்கை | 17 |
| 04 | நிர்மானிக்கப்பட்ட பஸ் தரிப்பிட நிலையம் / வாகனம் நிறுத்தும் இடங்களின் எண்ணிக்கை | 30 |
| 05 | நிர்மானிக்கப்பட்ட நூலகங்களின் எண்ணிக்கை | 53 |
| 06 | நிர்மானிக்கப்பட்ட ஆயுள்வேத மற்றும் சுகாதார மத்திய நிலையங்களின் எண்ணிக்கை | 11 |
| 07 | நிர்மானிக்கப்பட்ட பொது வசதி மத்திய நிலையங்கள் மற்றும் பொது மலசல கூடங்களின் எண்ணிக்கை | 11 |
| 08 | நிர்மானிக்கப்பட்ட பகற்காப்பு மத்திய நிலையங்களின் எண்ணிக்கை | 10 |
| 09 | நிர்மானிக்கப்பட்ட பொதுக் கட்டடங்களின் எண்ணிக்கை | 07 |
| 10 | நிர்மானிக்கப்பட்ட நீர் வழங்கும் செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 96 |
| 11 | நிர்மானிக்கப்பட்ட மயானங்களின் எண்ணிக்கை | 20 |
| 12 | நிர்மானிக்கப்பட்ட பூங்கா / விளையாட்டு மைதானங்களின் எண்ணிக்கை | 62 |
| 13 | நிர்மானிக்கப்பட்ட கழிவுநீர் வெளியேற்றும் குழாயத் தொகுதிகளின் எண்ணிக்கை | 11 |
| 14 | நிர்மானிக்கப்பட்ட கலாசார மத்திய நிலையங்களின் எண்ணிக்கை | 11 |
| 15 | நிர்மானிக்கப்பட்ட அலுவலகக் கட்டடங்களின் எண்ணிக்கை | 20 |
| 16 | நிர்மானிக்கப்பட்ட கால்வாய்த் தொகுதிகளின் எண்ணிக்கை | 53 |
| 17 | தாபிக்கப்பட்ட மூல அலுவலகங்களின் எண்ணிக்கை (101 உள்ளூராட்சி மன்றங்களில்) | 101 |

| கல்வி உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி | | |
|---|---|---|
| 01 | நிர்மானிக்கப்பட்ட பாடசாலை விஞ்ஞான ஆய்வுகூடக் கட்டடங்களின் எண்ணிக்கை | 135 |
| 02 | நிர்மானிக்கப்பட்ட / புணரமைக்கப்பட்ட வலயக் கல்வி அலுவலகக் கட்டடங்களின் எண்ணிக்கை | 27 |
| 03 | நிர்மானிக்கப்பட்ட / புணரமைக்கப்பட்ட கோட்டக் கல்வி அலுவலகங்களின் எண்ணிக்கை | 68 |
| 04 | பாடசாலைகளுக்கிடையே பகிரப்பட்ட கணணி இயந்திரங்களின் எண்ணிக்கை | 16,750 |
| 05 | கணணி உதிரிப்பாகங்களின் அளவு | 113,900 |
| 06 | அலுவலக மேசைகள் மற்றும் கதிரைகளின் எண்ணிக்கை | 14,032 |
| 07 | விநியோகிக்கப்பட்ட வேன் மற்றும் கப் வண்டிகளின் எண்ணிக்கை | 60 |
| 08 | பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி, நிதி மற்றும் முகாமைத்துவ, பெறுகை மற்றும் சுற்றாடல் முகாமைத்துவ விடயத்தின் கீழ் பயிற்சிபெற்ற உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் | 4590 |

| சுகாதாரத் துறையின் அபிவிருத்திகள் | | |
|---|---|---|
| 01 | கணணி புள்ளிவிபரத் தொகுதியினைப் பயன்படுத்தும் வைத்தியசாலைகளின் எண்ணிக்கை | 196 |
| 02 | வைத்தியசாலைகளில் அவசர வைத்தியப் பிரிவுகளைத் தாபித்தல் மற்றும் தற்போதுள்ள சிகிச்சைப் பிரிவுகளை அபிவிருத்தி செய்தல் | 445 |
| 03 | மகப்பேற்று மற்றும் சிறுவர் சிகிச்சைப் பிரிவினை அபிவிருத்தி செய்தல் | 3646 |
| 04 | தாபிக்கப்பட்டுள்ள ஆரோக்கிய வாழ்வு மத்திய நிலையங்களின் எண்ணிக்கை | 31 |
| 05 | சுகாதார வாழ்க்கை முறை மத்திய நிலையத்தைத் தாபித்தல் | 127 |
| 06 | சுகாதாரத் தர முகாமைத்துவப் பிரிவைத் தாபித்தல் | 73 |

| திண்மக் கழிவு முகாமைத்துவத்தை முறைப்படுத்தல். | | |
|---|---|---|
| 01 | உள்ளூராட்சி மன்றங்களுக்காக விநியோகிக்கப்பட்ட ஜப்பான் தொழில்நுட்ப சேதனப் பசளை இயந்திரங்களின் எண்ணிக்கை (Kawashima Machine) | 09 |
| 02 | உள்ளூராட்சி மன்றங்களுக்காக விநியோகிக்கப்பட்ட கம்பெட்டர் எண்ணிக்கை | 100 |
| 03 | உள்ளூராட்சி மன்றங்களுக்காக விநியோகிக்கப்பட்ட கழி பவுசர்களின் எண்ணிக்கை | 09 |

| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற நிறுவன சட்ட முறைமையினை மீள் கட்டமைத்தல் | | |
|---|---|---|
| 01 | மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபை கட்டளைகளை மறுசீரமைத்தல் | 90% பூர்த்தி |
| 02 | உள்ளூராட்சி மன்ற நிறுவன வாக்கெடுப்பு கட்டளைச் சட்டத்தின் மறுசீரமைப்புத் தொடர்பான சகல விடயங்களையும் உள்ளடக்கி பரிசீலனை வசதிக்காக ஒரு சட்டமாகத் தயாரித்தல். | பூர்த்தி |
| 03 | 2017 இலக்கம் 17 கொண்ட மாகாண சபைத் தேர்தல் மறுசீரமைப்புச் சட்டத்தின் தொழில்நுட்பக் கோளாறுகளை நிவர்த்தி செய்யும் யோசனைகளைத் தயாரித்தல். | பூர்த்தி |
| 04 | தோட்டத் தொழிலாளர்களின் நலன்புரியினை வழங்குவதற்காக ஒதுக்கீடுகளை வழங்கக்கூடிய வகையில் பிரதேச சபைச் சட்டத்தை மறுசீரமைத்தல். | பூர்த்தி |
| 05 | உள்ளூராட்சி மன்ற நிறுவன இடைக்கால பிரமானக் குறிப்பினை தயாரிப்பது தொடர்பான வழிகாட்டல் கோவை மற்றும் மாகாண சபைக் கொள்கை வகுப்பு ஆலோசனைக் கோவையினை அச்சிட்டு பகிரங்கப்படுத்தல் | பூர்த்தி |
| 06 | மாகாண சபை கொள்கைப் பிரகடனம் தொடர்பில் ஆய்விற்குட்படுத்தி மாகாண சபைகளின் கொள்கைப் பிரகடனங்களை விதிப்பதற்கான தேவைகளை இனங்கண்டு மாதிரி கொள்கைப் பிரகடனங்களை வகுக்கும் வேலைத்திட்டங்களை ஆரம்பித்தல். | பூர்த்தி |
| 07 | முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப் பணங்களை மாகாண சபை உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கு நேரடியாக வழங்குவது தொடர்பிலான சட்டத்தை விதித்தல் | 90% பூர்த்தி |

| அமைச்சின் மானிட வள அபிவிருத்தி | | |
|---|---|---|
| 01 | வெளிநாட்டுக் கொள்ளளவு பயிற்சி வேலைத்திட்டங்களுக்காக ஈடுபடுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | 17 |
| 02 | உள்நாட்டுக் கொள்ளளவு பயிற்சி வேலைத்திட்டங்களுக்கு ஈடுபடுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | 263 |

| உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் மக்கள் பிரதிநிதிகள் / உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வேலைத்திட்டங்களை நடாத்துதல் (உள்ளூராட்சி ஆளுகை தொடர்பான இலங்கை நிறுவகம்) | | |
|---|---|---|
| 01 | உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பாக உயர் டிப்ளோமா பாடநெறி உட்பட நடாத்தப்பட்ட பயிற்சி வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை (தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பணி நிருவாகிகள் உட்பட ஏனைய தொழில்நுட்பம் அல்லாத பணியாளர் சபை) | 156 |

| உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்காக சலுகை நிபந்தனைகளுக்கமைய கடன் வழங்குதல் (உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்) | | |
|---|---|---|
| 01 | உள்ளூராட்சி மன்ற நிறுவங்களின் 13 அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட சலுகைக்கடன் அளவு | 1115 ரூபா. மில்லியன் |
| 02 | உள்ளூராட்சி மன்ற நிறுவங்களின் 11 அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக விடுவிக்கப்பட்ட சலுகைக்கடன் அளவு | 403 ரூபா. மில்லியன் |

# 3

# அமைச்சின் பிரிவுகள் மற்றும் நிறுவனங்களின் செயற்சாதனைகள்

# 3.1. அபிவிருத்திப் மற்றும் பயிற்றுவிப்புப் பிரிவு

## 3.1.1. அபிவிருத்திப் பிரிவு

2018 ஆம் ஆண்டில் அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் கீழ் அமுல்படுத்தப்பட்ட பிரதான வேலைத்திட்டங்கள் தொடர்பான முன்னேற்றங்கள் 2018.12.31 ஆம் திகதியளவில் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

### 3.1.1.1 கிராமிய பிரதேசங்களில் 1000 கிலோமீற்றர் வீதியினை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம்

| 2018 ஒதுக்கீடு (ரூபா) | 2018.12.31 ஆம் திகதியன்று செலவினம் (ரூபா) | நிதி முன்னேற்றங்கள் | பௌதீக முன்னேற்றங்கள் |
|---|---|---|---|
| 1,343,000,000.00 | 1,175,418,577.12 | 87.5% | 94% |

2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 1120 அபிவிருத்திச் செயற்திட்டங்கள் உட்பட இவ் வேலைத்திட்டத்தின் கீழ் சகல மாகாணங்களையும் தழுவக்கூடிய வகையில் 2018 ஆம் ஆண்டில் 1389 அபிவிருத்திச் செயற்திட்டங்களில் 100% பணிகள் பூர்த்தி செய்யப்பட்டதுடன் இதன் கீழ் 313.69 கிலோ மீற்றர் வீதி அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் 100% பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட 146 செயற்திட்டங்களில் கட்டணங்கள் இவ் அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ள போதிலும் கட்டுநிதி இன்மையினால் கொடுப்பனவு மேற்கொள்ள முடியவில்லை.

### 3.1.1.2. உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்யும் மூலதன வேலைத்திட்டம்

| 2018 ஒதுக்கீடு (ரூபா) | 2018.12.31 ஆம் திகதியன்று செலவினம் (ரூபா) | நிதி முன்னேற்றங்கள் | பௌதீக முன்னேற்றங்கள் |
|---|---|---|---|
| 650,000,000.00 | 598,202,809.75 | 92% | 97% |

2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 640 அபிவிருத்திச் செயற்திட்டங்கள் உட்பட இவ் வேலைத்திட்டத்தின் கீழ் சகல மாகாணங்களையும் தழுவக்கூடிய வகையில் கீழ்க் குறிப்பிட்டவாறு பிரதான துறைகளின் கீழ் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்யும் 675 செயற்திட்டங்களில் 100% பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டில் 100%பணிகளில் 35 இறுதிச் செயற்திட்டங்களின் கட்டணங்கள் இவ் அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ள போதிலும் கட்டுநிதி இன்மையினால் கொடுப்பனவு மேற்கொள்ள முடியவில்லை.

| தொடர் இல | குறைகள் |
|---|---|
| 1. | வர்த்தகக் கட்டட நிர்மானிப்பு |
| 2. | வாராந்த சந்தைக் கட்டடத்தை அபிவிருத்தி செய்தல் |
| 3. | வர்த்தக நிலையங்களை நிர்மானித்தல் |
| 4. | நீர் சார்ந்த செயற்திட்டங்களை அபிவிருத்தி செய்தல் |
| 5. | நூலகக் கட்டட நிர்மானிப்பு |
| 6. | பொது மற்றும் சிறுவர் பூங்காவினை அபிவிருத்தி செய்தல் |
| 7. | சமூக சேவை மண்டபத்தினை நிர்மானித்தல் |
| 8. | பொது மலசல கூட நிர்மானிப்பு / அபிவிருத்தி செய்தல் |
| 9. | மயானங்கள் மற்றும் பொது மயானத்தை அபிவிருத்தி செய்தல் |
| 10. | வாகனத் தரிப்பிடங்களை அபிவிருத்தி செய்தல் |
| 11. | சுற்றுலா கவர்ச்சி கொண்ட இடங்களை அபிவிருத்தி செய்தல். |

## 3.1.1.3. பிரதேச சபையினை பலப்படுத்தும் வேலைத்திட்டம் (மீண்டெழும்)

| 2018 ஒதுக்கீடு (ரூபா) | 2018.12.31 ஆம் திகதியன்று செலவினம் (ரூபா) | நிதி முன்னேற்றங்கள் | பௌதீக முன்னேற்றங்கள் |
|---|---|---|---|
| 973,086,000.00 | 640,386,490.83 | 65.8% | 100% |

2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 445 அபிவிருத்திச் செயற்திட்டங்கள் உட்பட இவ் வேலைத்திட்டத்தின் கீழ் சகல மாகாணங்களையும் தழுவக்கூடிய வகையில் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்யும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட 450 செயற்திட்டங்களில் 100% பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டில் உரிய பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட 57 அபிவிருத்திச் செயற்திட்டங்களின் கட்டணங்கள் இவ் அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ள போதிலும் கட்டுநிதி இன்மையினால் கொடுப்பனவு மேற்கொள்ள முடியவில்லை.

## 3.1.1.4. கிழக்கு மாகாணத்தின் கால்வாய்த் தொகுதியினை அபிவிருத்தி செய்தல்

| 2018 ஒதுக்கீடு (ரூபா) | 2018.12.31 ஆம் திகதியன்று செலவினம் (ரூபா) | பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை | நிதி முன்னேற்றம் | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 59,050,000.00 | 59,025,418.61 | 11 | 99.9% | 100% |

இதன் கீழ் கல்முனை மாநகர சபை, அக்கரைப்பற்று மாநகர சபை, மட்டக்களப்பு மாநகர சபை, திருகோணமலை நகர சபை, கிண்ணியா நகர சபை, ஏறாவூர் நகர சபை, காத்தான்குடி நகர சபை, பொத்துவில் பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்ற நிறுவன அதிகாரப் பிரதேசங்களின் நகர பிரதேசங்களில் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 2.168 கிலோ மீற்றர் தூரம் கொண்ட கால்வாய்த் தொகுதி அபிவிருத்தி செய்யப்பட்டது.

**** 2017 ஆம் ஆண்டு இறுதியில் கட்டணங்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு போதியளவு கட்டுநிதி கிடைக்காமையினால் கௌரவ அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கமைய 2017 ஆம் ஆண்டில் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களுக்குரியதான நிலுவை கட்டணப் பட்டியல்களை தீர்க்கும் வகையில் 2018 ஆம் ஆண்டில் வரவு செலவு ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்டன.***

## 3.1.1.5. யாத்திரிகர்களுக்காக தங்குமிடத்தை நிர்மானித்தல் (வசதியான மத்திய நிலைய நிர்மானிப்பு)

2018 ஆம் ஆண்டு வரவு செலவு யோசனைத் திட்டத்தின் மூலம் யாத்திரிகர்களுக்காக அனுராபுரம், சிவனொலிபாதமலை, நல்லூர், மடு, முன்னேஸ்வரம் மற்றும் கோணேஸ்வரம் ஆகிய இடங்களில் தங்குமிடங்களை நிர்மானிக்கும் வேலைத்திட்டங்களுக்காக இவ் அமைச்சின் கீழ் 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ் இடங்களில் நல்லூர் மற்றும் முன்னேஸ்வரம் ஆகிய புனித ஸ்தலங்களை நிர்மானிப்பதற்காக பொருத்தமான காணி தொடர்பில் காணப்பட்ட பிரச்சினைகள் காரணமாக அவ்விடங்களில் தங்குமிடங்களை நிர்மானித்தல் (வசதி கொண்ட மத்திய நிலையங்கள் நிர்மானிப்பு) ஆரம்பிக்க முடியவில்லை.

இதற்கமைய அனுராதபுரம் மற்றும் சிவனொலிபாதமலை ஆகிய சமூக ஸ்தலங்களுக்குரியதான வசதிமிக்க மத்திய நிலையங்களை தாபிப்பது தொடர்பில் மனையாக்கத் திட்டங்கள், கட்டமைக்கப்பட்ட திட்டங்கள், விளக்கமான மதிப்பீடுகள் மற்றும் கேள்வி ஆவணங்களைத் தயாரித்து அதற்குரியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆலோசனை நிறுவனமான அரச கட்டடத் திணைக்களத்தின் மூலம் வகுக்கப்பட்டுள்ளதுடன், ஏற்கனவே இதன் பெறுகைச் செயற்பாடுகள் இறுதிக் கட்டத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டுக்குள் மேற்கூறப்பட்ட இரு இடங்களான மடு மற்றும் கோணேஸ்வரம் ஆகிய இடங்களுக்குரியதான பெறுகைச் செயற்பாடுகளுக்குரியதான பணிகளையும் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இச் சமய ஸ்தலங்களுக்கு யாத்திரிகர்கள் மற்றும் உள்நாட்டை போன்று வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகள் பெரும் எண்ணிக்கையானோர் வருகை தருவதில் தற்போதைய தேவைகளுக்கு, உரிய பிரதேசத்திற்கு மற்றும் புவியின் அமைவிடத்திற்கு ஏற்றவாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ள வசதிகள் கொண்ட வசதியான மத்திய நிலையங்களை நிர்மானிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் வருடாந்த வருமானத்தை மேம்படுத்துவதற்கு வாய்ப்புக்கள் உருவாகின்றன.

| வழங்கப்படும் பொது வசதிகள் | |
|---|---|
| வசதியான மத்திய நிலையக் கட்டடங்கள் | உரிய தரத்திற்குள் |
| களைப்பினை நீக்குவதற்காக உரிய வசதிகள் கொண்ட பிரவேச மண்டபம்<br>உணவகம்<br>மலசலகூட வசதிகள்<br>நீராடுவதற்காக தேவையான குளியலறை<br>ஆடைகளை மாற்றுவதற்கான இடம்<br>மாற்றுத்திறனாளிகளுக்குத் தேவையான பிரவேச வசதிகள் | வாகனங்களை நிறுத்துவதற்கான வசதிகள்<br>உரிய இடத்தில் தங்கியிருப்பதற்கு கூடாரங்கள் மற்றும் கதிரை, பாதுகாப்பு வேலி<br>கழிவுநீர் வெளியேற்றல் தொகுதி<br>மழைநீர் கால்வாய்த் தொகுதி<br>காவல் அரன்<br>சிறு பிள்ளைகளுக்கான விளையாட்டு முற்றம் |

## 3.1.1.6. நூலக அபிவிருத்தி வேலைத்திட்டம் 2018

நூலக அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்குரியதாக 2018 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு ரூபா 25.0 மில்லியனைப் பயன்படுத்தி கீழே குறிப்பிடப்பட்டுள்ள 2 செயற்திட்டங்களை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1. 14 நூலகங்கள் சுயமாக செயற்படல்
2. கொழும்பு பொது நூலக வளாகத்தில் பொது இலத்திரணியல் நூலக மத்திய நிலையத்தைத் தாபித்தல்

## 3.1.1.6.1. 14 நூலகங்களின் சுய செயற்பாட்டு முறைமை

### அறிமுகம் :

நீண்டகாலமான பொது நூலகங்களில் பயன்படுத்தப்படும் பெறுகை முறைகளுக்குப் பதிலாக நவீன தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட முறையினைப் பயன்படுத்தி வினைத்திறன், உற்பத்தித்திறன் மற்றும் பண்புசார் தரம்மிக்க சேவையை நூலக வாசகர்களுக்கு வழங்குவதை நோக்காகக் கொண்டு நாட்டின் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுடன் இணைந்து பொது நூலகங்களை சுயமாக செயற்படுத்தும் செயற்திட்டம் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் அது 2017 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டது. நூலகங்கள் தன்னியக்கமாக இயங்குவது தொடர்பில் நிபுனத்துவம்மிக்க அரச நிறுவனமான இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிபுனத்துவ உதவியுடன் இச் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. கூட்டிணைந்த மற்றும் சர்வதேச தரங்களுக்கமைய நூலக கணனி உள்ளீட்டுப் பயன்பாட்டுடன் தன்னியக்கமாக செயற்படுவது தொடர்பில் பொது நூலகங்களை ஊக்குவிக்கும் வகையில் தேவையான வன்பொருள், மென்பொருள், பயிற்சி மற்றும் வளங்களை வழங்குவதற்கு இச் செயற்திட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

புதிய செயற்திட்டங்களை வெற்றிகரமான அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு 2018 ஆம் ஆண்டில் 14 உள்ளூராட்சி மன்ற நிறுவன நூலகங்களை தன்னியக்கமாக செயற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

### முதலீடுகள் :

இச் செயற்திட்டத்திற்காக 5.4 மில்லியன் ரூபா தொழில்நுட்ப ஆலோசனை சேவைக்கு வழங்கப்பட்டதுடன், உரிய தொழில்நுட்ப உபகரணங்கள் 2017 ஆம் ஆண்டில் வட கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்ற சேவையை விருத்தி செய்யும் செயற்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

### தன்னியக்கமாக செயற்படும் நூலகங்களின் பட்டியல் :

| தொ. இல | மாகாணம் | மாவட்டம் | நூலகங்கள் / உள்ளூராட்சி மன்ற நிறுவகம் |
|---|---|---|---|
| 1 | தெற்கு | மாத்தறை | தெனியாய பொது நூலகம் / கொடபொல பிரதேச சபை |
| 2 | | | கிரிந்த பொது நூலகம் / கிரிந்த புகுள்வெல்ல பிரதேச சபை |
| 3 | கிழக்கு | அம்பாறை | பதியத்தலாவ பொது நூலகம் / பதியல்லதாவ பிரதேச சபை |
| 4 | ஊவா | பதுளை | பண்டாரவெல பொது நூலகம் / பண்டாரவெல நகர சபை |
| 5 | வடமேல் | புத்தளம் | சிலாபம் பொது நூலகம்/ சிலாபம் நகர சபை |
| 6 | வடக்கு | யாழ்ப்பாணம் | நல்லூர் பொது நூலகம் / யாழ்ப்பாணம் மாநகர சபை |
| 7 | வடமத்தி | பொலன்னறுவை | ஹிங்குரன்கொட பண்டாரநாயக்க பொது நூலகம் / ஹிங்குரன்கொட பிரசே சபை |
| 8 | மேற்கு | கொழும்பு | தெஹிவளை கல்கிஸ்சை மத்திய நூலகம் / தெஹிவளை நகர சபை |
| 9 | | | மொறட்டுவ பொது நூலகம் / மொறட்டுவ நகர சபை |
| 10 | | | பாதுக்க பண்டாரநாயக்க பொது நூலகம் / சீதாவக்க பிரதேச சபை |
| 11 | | | நுகேகொட பொது நூலகம் / ஸ்ரீ ஜயவர்தனபுர மாநகர சபை |
| 12 | | | அத்துருகிரிய பொது நூலகம் / கடுவெல நகர சபை |
| 13 | | | பெல்மட பொது நூலகம்/ கொழும்ப மாநகர சபை |
| 14 | மத்தி | கண்டி | தன்னேகும்புற பொது நூலகம் / கண்டி கடவத் சதர மற்றும் கங்கவடகோரளை பிரதேச சபை |

## 3.1.1.6.2. பொது இலத்திரணியல் நூலக மத்திய நிலையத்தைத் தாபித்தல்

நூலகங்களில் தன்னியக்க செயற்திட்டங்களின் கீழ் தன்னியக்கமாக்கப்பட்ட மற்றும் எதிர்வரும் ஆண்டுகளில் தன்னியக்க செயற்பாடுகளுக்கு உட்படுத்தப்படுத்தப்படும் உள்ளூராட்சி மன்றங்களுடன் இணைந்த நூலகங்கள் வலையமைப்பிற்குட்படுத்தும் மத்திய நிலையத்தை தாபிக்கும் செயற்பாடுகள் 2017 ஆம் ஆண்டில் நூலக அபிவிருத்தி வேலைத்திட்டத்தின கீழ் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், அது 2018 ஆம் ஆண்டில் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்காகவும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிபுனத்துவ சேவை பெற்றுக் கொள்ளப்பட்டது.

முதலீடுகள் :

- தொழில்நுட்ப சேவையினைப் பெற்றுக் கொள்வதற்காக - ரூபா 1.4 மில்லியன்
- மத்திய நிலைய வளாகத்தை நவீன மயப்படுத்துவதற்காக - ரூபா. 3.3 மில்லியன்
- தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் அலுவலகப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக - ரூபா 8.2 மில்லியன்

**முன்னேற்றங்கள்**

| செயற்திட்டம் | பௌதீக | நிதி |
|---|---|---|
| 14 நூலகங்களின் தன்னியக்க செயற்பாடுகளை தாபித்தல் | 98% | ரூபா 4.2 மில்லியன் கட்டணங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. |
| பொது இலத்திரணியல் நூலக மத்திய நிலையங்களை தாபித்தல் | 95% | ரூபா 9. மில்லியன் கட்டணம் கிடைக்கப் பெற்றுள்ளது. |

### 3.1.1.7. கொழும்பு மாநகர சபை அதிகார பிரதேசத்திற்குள் அமுல்படுத்தப்படும் வெளிநாட்டு முதலீட்டு செயற்திட்டங்களுக்காகத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.

மாநகர அபிவிருத்தி மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் கொழும்பு மாநகர சபை கூட்டாக இணைந்து கொழும்பு மாநகர சபை அதிகார பிரதேசத்திற்குள் அமுல்படுத்தப்படும் கீழ்க் குறிப்பிடப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டங்களுக்குரிய இணைப்புப் பணிகள் இவ் அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது.

1. சங்கிரிலா ஹோட்டல் செயற்திட்டத்தின் கீழ் கழிவகற்றல் தொகுதி, உள்ளக பிரவேச வீதி மற்றும் மின் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.
2. கொழும்பு துறைமுக நகருக்கான கழிவகற்றல் தொகுதியினை நிர்மானித்தல் (சைத்திய வீதியிலிருந்து புதிய சாரணர் மாவத்தை வரை)

## 3.1.2. பயிற்றுவிப்புப் பிரிவு

2018 ஆம் ஆண்டில் பயிற்சிப் பிரிவின் கீழ் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் மூலம் அமுல்படுத்தப்பட்ட பயிற்சி வேலைத்திட்டம் தொடர்பான முன்னேற்றங்கள் 2018.12.31 ஆம் திகதியளவில் கீழ்க் குறிப்பிட்டவாறு அமைகின்றது.

| 2018 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதி (ரூபா) | 2018.12.31 ஆம் திகதியன்று செலவினம் (ரூபா) | 2018.12.31 ஆம் திகதியன்று நிதி முன்னேற்றம் |
|---|---|---|
| 2,000,000.00 | 1,785,486.25 | 89 % |

நடாத்தப்பட்ட பயிற்சி வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை - 48

பங்கேற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை - 263

# 3.2. செயற்திட்டம் மற்றும் திட்டமிடல் பிரிவு

இப் பிரிவு பிரதானமாக செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு, திட்டமிடல் பிரிவு மற்றும் தகவல் தொழில்நுட்பப் பிரிவினைக் கொண்டமைந்துள்ளது.

### நோக்கு

அமைச்சின் சகல செயற்பாடுகளுக்குமான மூல உபாயத் திட்டங்களை வகுத்தல் மற்றும் வெளிநாடுகளில் செயற்திட்டத்திற்காக தூதுச் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

### பிரதான நோக்கங்கள்

1. இலங்கையின் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் மூலம் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைப் பொறுப்புடன் வழங்குவதற்கு உதவுதல்.
2. கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தில் பண்புசார் தரத்தை விருத்தி செய்வதற்குத் தேவையான வழங்கலை வழங்குதல்.

## 3.2.1. பிரதான பணிகள்

### 3.2.1.1. செயற்திட்ட மற்றும் முகாமைத்துவப் பிரிவு

1. வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களுக்குரியதான பணிகள் நிரல் அமைச்சு, திணைக்களம், செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு மற்றும் ஏனைய நிறுவனங்களுடனான இணைப்புக்கள் மூலம் செயற்திட்ட நோக்கங்களை எட்டுவதற்காக நடவடிக்கை எடுத்தல்.
2. அமுலில் உள்ள செயற்திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பான பின்னூட்டல்களை மேற்கொள்ளல்.
3. தேசிய செயற்திட்ட செயற்பாட்டுக் குழுக் கூட்டத்தை நடாத்துதல்.
4. செயற்திட்டங்களுக்குரிய அமைச்சரவைப் பத்திரத்தைத் தயாரித்தல்.
5. செயற்திட்டப் பணியாளர் சபையை சேர்த்துக் கொள்ளல் உட்பட நிருவாகப் பணிகளை மேற்கொள்ளல்.
6. அமைச்சின் ஏனைய பிரிவுகளுக்கிடையே உரிய இணைப்பினைப் பேணுதல்.
7. வெளிநாட்டு நிதி திட்டங்கள் மூலம் கொள்முதல் நடவடிக்கைகள் ஒருங்கிணைப்பு.
8. வெளிநாட்டு நிதி சார்ந்த திட்டங்களின் கீழ் உள் தணிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

### 3.2.1.2. திட்டமிடல் பிரிவு

1. அமைச்சின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டங்கள் மற்றும் மூல உபாயத் திட்டங்களை வகுத்து உரிய நிறுவனங்களுக்குச் சமர்ப்பித்தல்.
2. அமைச்சின் முன்னேற்ற அறிக்கையினை மாதாந்தம், காலாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் தயாரித்தல் மற்றும் உரிய நிறுவனங்களுக்கு சமர்ப்பித்தல்.
3. அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல்.
4. எதிர்காலத்திற்குரிய செயற்திட்ட யோசனைகளை இனங்காணுதல்.

5. வருடாந்த செயற்சாதனை அறிக்கையினைத் தயாரித்தல் மற்றும் பாராளுமன்ற வரவு செலவு செயற்குழு சபைச் சந்தர்ப்பத்தில் தேவையான செயற்சாதனைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்களை உள்ளடக்கிய அறிக்கையினைத் தயாரித்தல்.

### 3.2.1.3. தகவல் தொழில்நுட்பப் பிரிவு

1. அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை வாராந்தம் சமகாலப்படுத்தல்.
2. தகவல் தொகுதியினைப் பேணுதல் மற்றும் தகவல்களைச் சேகரித்தல்.
3. இணையத்தள வசதிகளை முன்னெடுக்கத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.
4. அமைச்சின் சகல பிரிவுகளுக்கும் மற்றும் உத்தியோகத்தர்களுக்குத் தேவையான தகவல் தொழில்நுட்ப உதவியினை வழங்குதல்.
5. நு-உள்ளூர் அரசாங்க வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்

இப் பிரிவின் கீழ் ஏற்கனவே 12 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இச் செயற்திட்டங்களின் சுமார் 500 பணியாளர்கள் சேவையாற்றுவதுடன், சகல மாகாணங்களையும் தழுவக்கூடியவாறு உரிய மாகாண சபைகள் ஊடாக இவை அமுல்படுத்தப்படுகின்றன. இவ் வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் முழுமையான முதலீடு ரூபா. 158,702.39 மில்லியனாகும். பல்வேறுபட்ட நிதி நிறுவனங்களினால் கடன் மற்றும் வழங்கல்களாக முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 3.2.2. வெளிநாட்டு நிதியுதவிக்கமைய முல்படுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்கள்

### 3.2.2.1. புறநெகும (மேலதிக ஒதுக்கீடு)

**நோக்கம்**

பாரியளவில் சிறுநீரக நோய் பரவியுள்ள பிரதேசங்களில் நீர் வழங்கல் செயற்திட்டத்தை விருத்தி செய்வதன் மூலம் நோய் பரவுவதனை குறைத்தல் மற்றும் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களில் கொள்ளளவினை விருத்தி செய்தல் உட்பட செயற்பாடுகளை மீள் கட்டமைப்பதன் மூலம் மிகவும் வினைத்திறன் மற்றும் பயன்மிக்க சேவைகளை வழங்குதல்

1. ஆபத்தான சிறுநீரக நோயினை குறைப்பதற்காக குடிநீர் வழங்கல் செயற்திட்டத்தை விரத்தி செய்தல்
2. உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் வழங்கப்படும் சேவைகளை வினைத்திறன் மற்றும் உற்பத்தித் திறனுடன் மேற்கொள்ளக்கூடிய வகையில் அந்நிறுவனங்களின் கீழ் நிர்வகிக்கப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்ல்.
3. உள்ளூராட்சி மன்ற நிறுவனச் செயற்பாடுகளை மீள் கட்டமைத்தல் மற்றும் கொள்ளவினை விருத்தி செய்தல்.

| | | | |
|---|---|---|---|
| | கடன் உதவி வழங்கும் நிறுவனங்கள் | ஆசிய அபிவிருத்தி வங்கி | |
| | செயற்திட்டச் செலவினம் (ரூபா. மில்) | 10,180.00 | |
| | செயற்திட்டக் காலம் | 2017-2020 | |
| | அமுல்படுத்தப்பட்ட பிரதேசம் | மேற்கு, வடமேல், தெற்கு, சப்ரகமுவ, ஊவா, மத்தி, வடமத்தி ஆகிய மாகாணங்கள் | |
| | 2018 ஒதுக்கீடு (ரூபா.மில்) | 1860.6 | |
| | 2018.31 ஆம் திகதியன்று நிதி இலக்கு / முன்னேற்றம் | 1860.6 | 1822.6 |
| | 2018.12.31 ஆம் திகதியன்று பௌதீக இலக்கு / முன்னேற்றம் | 55% | 51% |

| மேதிலக ஒதுக்கீடுகளின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள பெறுகை வேலைத்திட்டங்களை விருத்தி செய்யும் செயற்பாடுகள் | நிர்மானிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள அளவு | மேலதிக ஒதுக்கீட்டின் கீழ் நிர்மானிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள உட்கட்டமைப்பு செயற்திட்ட வேலைத்திட்டங்கள் | நிர்மானிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள செயற்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| வழங்கப்பட்ட மற்றும் நிர்மானப் பணிகள் மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்கள் (குடிநீர் வழங்கல் திட்டங்கள்) | 19 | சுகாதார மத்திய நிலையம் | 04 |
| | | பொதுச் சந்தை | 06 |
| | | மயானம் | 01 |
| விலைமனுக்களை கோரி ஒப்பந்தம் வழங்கப்படும் வேளையில் காணப்படும் செயற்திட்ட குடிநீர் வழங்கல் யோசனைத் திட்டம் | 06 | வாராந்த சந்தை | 02 |
| | | நூலகம் | 02 |
| விலைமனுக்களை கோரி ஒப்பந்ததை வழங்கக்கூடிய குடிநீர் வழங்கல் செயற்திட்டம் | 01 | கேட்போர் கூடம் | 02 |
| | | உள்ளூராட்சி மன்ற அலுவலகக் கட்டடம் | 14 |
| **மொத்தம்** | 26 | **மொத்தம்** | 31 |

இதற்கு மேலதிகமாக பிரதேச சபையினால் வழங்கப்படும் சேவைகளை மிகுந்த வினைத்திறன் மற்றும் உற்பத்தித் திறன்மிக்க முறையில் மேற்கொள்ளக்கூடியவாறு இந் நிறுவனத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் உட்கட்டமைப்பு வசதிகள் முறையினை விருத்தி செய்தல், வரிப்பணம் உட்பட ஏனைய பொது அறவீடுகள் மற்றும் அனுமதிப்பத்திரங்களை வெளியிடும் செயற்பாடுகளை இலகுபடுத்தல் மற்றும் அவற்றை அங்கீகரிக்கும் முறைகளை மிகுந்த நெகிழ்வுத் தன்மையுடன் மேற்கொள்ளக்கூடியவாறு பிரதேச சபையின் கொள்கைகளை மறுசீரமைப்பதைப் போன்று மக்களின் பணிகளை இலகுபடுத்தவத்றகாக கணணி வசதிகள் கொண்ட முன்னிலை அலுவலகத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 3.2.2.2. கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டம்

**உள்ளீடு 01** - கொழும்பு மாநகர சபையின் பிரச்சினைக்குரிய மற்றும் பணிக்குரிய கழிவு நீர் தொகுதி (10 கிலோ மீற்றர்) புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி செய்தல் உள்ளிட்ட தேர்ந்தெக்கப்பட்ட கழிவுநீர் தொகுதிக்கான CCTV ஆய்வுகளை அறிமுகப்படுத்தல், தரம் தொடர்பிலான மதிப்பீட்டு அறிக்கைளை பெற்றுக் கொள்ளல் மற்றும் சொத்து முகாமைத்துவ புள்ளிவிபரங்களை களஞ்சியசாலையாக அபிவிருத்தி செய்தல்.

### பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்கள் 2018

i. M26 கழிவுநீர் அகற்றும் தொகுதி நிர்மானித்தல். 88.21% குழாய்களை பொருத்தும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

ii. R1 - (பிரேபுறுட் பிளேஸ் கழிவுநீர் தொகுதி நிர்மானிப்பு - சுமார் 50% பணிகள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

iii. செரன்டிப் பிளேஸ் கழிவுநீர் அகற்றல் தொகுதி நிர்மானிப்பு - சுமார் 90% பணிகள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

iv. ஏற்கனவே கொழும்பு மாநகர சபை பிரதேசத்திற்குள் CS19 கழிவு நீர்த் தொகுதியினை புனரமைக்க உதவுதல்.

v. ஏற்கனவே கொழும்பு மாநகர சபை உட்பட கழிவுநீர்த் தொகுதி ஞிழவ புனரமைத்தல் ழிநெ உரவ - 98.4% மற்றும் trenchless - 100% முறையினை பயன்படுத்தி மேற்கொள்ளல்.

vi. தேர்ந்தெடுக்கப்பட்ட கழிவுநீர் குழாய்களின் CCTV தயாரித்தலில் சுமார் 99% பணிகள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

**உள்ளீடு 02 –** 10 பம்பித் தளங்களை அபிவிருத்தி செய்தல், நிர்மானித்தல், மேற்பார்வை நிர்வாக நிலைமைகளை பெற்றுக் கொள்ளும் முறைமையினை விருத்தி செய்தல் கொழும்பு மாநகர சபை கழிவு நீர் அகற்றும் பிரிவிற்கு SCADA முறைமை மற்றும் 14 பம்பிகளை தொடர்புபடுத்தி புதிய பிரதான மேற்பார்வைப் பிரிவினைத் தாபித்தல்

### பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்கள் 2018

i. பம்பலப்பிட்டி பம்பித் தளத்தை நிர்மானித்தல் - 90.05% நிர்மானப் பணிகளை பூர்த்தி செய்தல், வணாத்தமுல்ல - 83.37% நிர்மானப் பணிகளை பூர்த்தி செய்தல், கொம்பனிதெரு - 83.50% நிர்மானப் பணிகளை பூர்த்தி செய்தல். CS3 - 82.18% நிர்மானப் பணிகளை பூர்த்தி செய்தல்.

ii. மாளிகாவத்தை மற்றும் திம்பிரிகஸ்யாய பம்பி நிலையத்தில் Secant Piling நிர்மானித்தல்.

iii. வணாத்தமுல்ல மற்றும் ஏலவைறலமந ஆகிய இடங்களில் அழுத்த மார்க்கங்களை நிர்மானித்தல், வணாத்தமுல்ல 29.8% நிர்மானப் பணிகளை பூர்த்தி செய்தல். Vystwyke 15% நிர்மானப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

iv. வேலைத்தளப் பிரிவு நிர்மானிப்பு - சகல நிர்மானப் பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

## 3.2.2.3. கொழும்பு பெரும்பாக கழிவு நீர் முகாமைத்துவத்தை விருத்தி செய்யும் முதலீட்டு வேலைத்திட்டம் - (GCWWMIIP)

**கட்டம் 2 மற்றும் கட்டம் 3**

**பூர்த்தி செய்யப்பட்ட செயற்பாடுகள் 2018**

1. கூட்டிணைக்கப்பட்ட ஊக்குவிப்பு ஆலோசனையின் கீழ் கொழும்பு மாநகர சபையின் கழிவு நீர்ப் பிரிவின் பணியாளர் சபைக்காக கீழ்க் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை அமுல்படுத்தல்.

   i. பயிலுனர்களை பயிற்றுவிக்கும் திட்டங்கள்

   ii. செயற்பாட்டுத் திட்டங்கள்

   iii. அவதான மதிப்பீட்டு மார்க்கங்கள்

   iv. செயற்பாடுகள் மற்றும் பராமரிப்புப் பணிகளின் கோவை

   v. சுத்திகரிப்பு கழிவகற்றல்களை வெளியேற்றுவதற்கு வரவேற்பளிப்பதற்கான திட்டங்கள்

   vi. 5S பயிற்சித் திட்டங்கள்

   vii. ஊக்குவிப்புக்களை ஏற்படுத்தும் வகையில் பயிற்சி முகாம்

2. கிருளப்பனை கழிவுநீர்த் தொகுதி பிரதேசத்தில் புதிய கழிவு நீர் அகற்றும் குழாய் தொகுதி, அழுத்த குழாய் மார்க்கங்கள் மற்றும் பம்பிகளை உருவாக்குதல், கழிவு நீர்த் தொகுதிகள் இன்றி பிரதேசங்களில் கழிவுநீர்க் குழாய்களை பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

3. கிருளுப்பனை நாராஹென்பிட்ட பிரதேசங்களில் நிர்மானிப்பு, கிருளப்பனை நாராஹென்பிட்ட பிரதேசங்களில் கழிவு நீர் தொகுதி இல்லாத பிரதேசத்திற்கு விளக்கமான திட்டங்கள், ஒரு பம்பி உட்பட கழிவு நீர்த் தொகுதியினை வழங்குதல்.

## 3.2.2.4 வட மாகாண வீதி இணைப்புச் செயற்திட்டம் (ஆரம்பம்)

### அறிமுகம் மற்றும் நோக்கம்

ஆரம்ப செயற்திட்டத்தில் வெற்றியினை அடிப்படையாகக் கொண்டு இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கைக்கமைய ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வடக்கு வீதி தொடர்பான செயற்திட்டத்திற்கு மேலதிக நிதியாக 68 மில்லியன் அ.டொலர் கடன் உதவி நாட்டின் வட பகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய மற்றும் மாகாண வீதிப் புனரமைப்பிற்காக வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 30 மில்லியன் அ.டொலர் மாகாண உள்ளீட்டின் கீழ் வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 125 கிலோ மீற்றர் மாகாண வீதிகளை புனரமைப்பதற்காக மற்றும் வட மாகாணம் உட்பட வடமத்திய மாகாண வீதி சார்ந்த நிறுவனங்களை பலப்படுத்துவதற்காக பயன்படுத்தவும் எதிர்பார்க்கப்பட்டது.

**கடன் விபரங்கள்**

கடன் இலக்கம் (2890 SRI (SF) - மேலதிக ஒதுக்கீடு

நிதிச் செயற்திட்ட செலவினம் 30 மில்லியன் அ.டொலர் (மாகாண உள்ளீட்டிற்காக)

அரச அனுசரனை - 4.87 மில்லியன் அ.டொலர்

| விபரங்கள் | திகதி |
|---|---|
| கடன் கலந்துரையாடல் | 2012 ஜூலை 23-25 |
| கடன் உடன்படிக்கை கைச்சாத்திடல் | 2012 நவம்பர் 19 |
| கடன் அமுலாகும் திகதி | 2013 மே 31 |
| கடன் வழங்கும் இறுதித் திகதி | 2019 டிசம்பர் 31 |

### செயற்பாட்டு நிறுவனங்கள்

மாகாண சபை, உள்ளூராட்சி மன்ற மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு இச் செயற்திட்டத்தின் செயற்பாட்டு நிறுவனமாக அமுல்படுத்தப்பட்டுள்ளது.

### அமுல்படுத்தும் நிறுவனங்கள்

வடமாகாணத்தின் மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் வடமத்திய மாகாணத்தின் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் இச் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனமாக செயற்படுகின்றது.

### செயற்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் 2018/2019

மேலதிக நிதி நிறுவனத்தின் கீழ் வடமத்திய மாகாணத்தில் 05 வீதிகளின் ஒப்பந்தமும், வட மாகாணத்தில் 04 வீதிகளின் ஒப்பந்தமும் வழங்கப்பட்டுள்ள பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களில் 5 வருட காலங்களுக்காக இவ் வீதியினை பராமரிப்பு செய்வதற்குரியதாக ஒப்பந்தாரர்களினால் செயற்பாடுகள் முன்கொண்டு செல்ல திட்டமிடப்பட்டுள்ளன.

### பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் 2018 டிசம்பர் 30 வரை

| | நிதி முன்னேற்றம் ரூபா. மில்லியன் | | | பௌதீக முன்னேற்றம் ரூபா. மில்லியன் | |
|---|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு | செலவினம் | விகிதாசாரம் % | % | % |
| அமுல்படுத்தும் பிரிவு | 11.23 | 8.34 | 74.26% | | |
| வட மாகாணம் | 249.76 | 248.05 | 99.31% | 100% | 100% |
| வடமத்திய மாகாணம் | 50.56 | 48.06 | 95.05% | 100% | 100% |

### செயற்திட்டத்தை அமுல்படுத்தும் ஆலோசனைகள்

ஏற்கனவே பாரமரிப்புப் பணிகளின் மேற்பார்வை வட மாகாணத்தின் மாகாண அபிவிருத்தி திணைக்களம் மற்றும் வட மத்திய மாகாணத்தின் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் முன்னெடுக்கப்படுகின்றது.

## 3.2.2.5 யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்புச் செயற்திட்டம்

1. செயற்திட்டத்தின் பெயர் : யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுத்தகரிப்புச் செயற்திட்டம் இரணைமடு உள்ளீடு (JKWSSP - IC)
2. நோக்கம் : இரணைமடு நீர்த்தேக்க தலைமையகத்தின் பணிகளை பலப்படுத்தி மேலதிக நீரை பாதுகாப்பாக தேக்கி வைப்பதை உறுதிப்படுத்தல்.
3. நிதி உதவி : ஆசிய அபிவிருத்தி வங்கி (கடன் இலக்கம் : 2710, 2711 மற்றும் இலங்கை 12.93 மில்லியன் அ.டொலர் உட்பட 3.41 மில்லியன் அ.டொலர் ஸ்ரீ கணிப்பீடு அ.டொலர் மில்லியன்
4. செயற்பாடுகள் : இரணைமடு நீர்த்தேக்கத்தின் கொள்ளளவினை விருத்தி செய்தல் மற்றும் திருவையாறு உத்சான நீர்வழங்கல் திட்டத்தை பலப்படுத்தல்.
5. நிறைவு : தலைமையகச் செயற்பாட்டு பணிகளை புனரமைப்பு செய்து கொள்ளளவு மற்றும் 17 மில்லியன் மீற்றரினால் அதிகரித்தல். (131 மீற்றர் தொடக்கம் 148 வரை) மற்றும் திருவையாறு உத்சான நீர்ப்பாசன திட்டத்தை புனரமைத்தல்.
6. பெறுபேறுகள் : இரணைமடு பாதுகாப்பு தலைமையக பணிகள் மற்றும் சிறுபோகத்தின் செய்கையினை அதிகரித்தல்.
7. கால எல்லை : 2011 மே மாதம் 06 தொடக்கம் 2018 டிசம்பர் வரை
8. செயற்திட்ட மேற்பார்வை நிறுவனம் : மாகாண சபை, உள்ளூராட்சி மன்ற மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு
9. அமுல்படுத்தும் நிறுவனம் : வடமாகாண சபை மற்றும் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம்
10. செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு : பதவி நிலை உத்தியோகத்தர் பகுதி நேர அடிப்படையில் அடங்குகின்றனர்.

    (செயற்திட்டப் பணிப்பாளர், பிரதி செயற்திட்டப் பணிப்பாளர், உள்ளகக் கணக்காய்வாளர், பொறியியலாளர், நிதி உதவியாளர், முகாமைத்துவ உதவியாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், திட்டமிடல் கலைஞர்)

11. ஆலோசகர்கள் : எம்.பீ. ஆலோசகர், பங்களாதேஷ் நிறுவனம் இணைந்த M/S இம்போட்டன்ட் ஜசியான் பிரைவட் லிமிட்டட் இலங்கை

12. ஆலோசகரின் கடமை : ஆய்வு மற்றும் மேற்பார்வையினை மேற்கொள்ளல், அபிவிருத்தி யோசனைகளை வகுத்தல், செயற்திட்ட ஆக்கம், மதிப்பீடுகளை தயாரித்தல் மற்றும் நிர்மான மேற்பார்வைகளை மேற்கொள்ளல்.

## 3.2.2.6. இடைநிலைச் சுகாதார துறைசார்ந்த அபிவிருத்திச் செயற்திட்டம்

### செயற்திட்டப் பின்னணி

இரண்டாவது சுகாதார துறைசார்ந்த அபிவிருத்திச் செயற்திட்டம் (SHSDP) 200 மில்லியன் அ.டொலர் உலக வங்கிக் கடன் திட்டத்தின் கீழ் சுகாதார, போசாக்கு மற்றும் உள்நாட்டு வைத்திய அமைச்சு உட்பட மாகாண சபை, உள்ளூராட்சி மன்ற மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சுடன் இணைந்து அமுல்படுத்தப்பட்ட ஐந்து ஆண்டு செயற்திட்டமாகும். இச் செயற்திட்டம் 2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2018 டிசம்பர் மாதத்தில் நிறைவடைந்தது.

இச் செயற்திட்டத்தின் மூலம் இலங்கையில் சுகாதார பாதுகாப்பு பண்புசார் தரம், பிரவேச மற்றும் பிரதேச முறண்பாடுகளை கட்டுப்படுத்தல், மாகாண சபை, உள்ளூராட்சி மன்ற மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் நோக்கங்களுக்கிடையே பிரதானமானதாகும்.

| | |
|---|---|
| உதவி வழங்கும் நிறுவனங்கள் | உலக வங்கி |
| மொத்தச் செயற்திட்ட செலவினம் | ரூ.மில் 26,000 (200 அ.டொலர்) |
| செயற்திட்டக் காலம் | 2013 - 2018 |
| செயற்திட்ட பிரதேசம் | முழு நாடும் |
| செயற்திட்டத்தின் பயனாளிகள் | நாட்டின் மொத்த சனத்தொகை |

**செயற்திட்ட அபிவிருத்தி நோக்கம் (PDO) :** பொதுச் சுகாதார முறைமையில் செயற்சாதனை தரத்தினை மேம்படுத்தல் மற்றும் மந்த போசாக்கு உட்பட தொற்றாத நோய்கள் ஆகிய சவால்களுக்காக சிறந்த முறையில் வரவேற்ப்பினை வழங்கக்கூடிய இயலுமைகளை வகுத்தல்.

**பிரதான துறைகள்**

(i) மகப்பேற்று மற்றும் சிறுவர் சுகாதாரம் உட்பட போசாக்கு தொடர்பிலான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

(ii) தொற்றாத நோயினை தடுத்தல் மற்றும் நிருவாகம்

(iii) தொற்று நோய்களை தடுத்தல் மற்றும் நிருவாகம்

(iv) சுகாதார முறைமையினை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்

செலவினம் தொடர்பில் 09 ஒப்பளவுகள் மற்றும் செலவினங்களுடன் தொடர்புபடாத 11 ஒப்பளவுகளை அடிப்படையாகக் கொண்ட செயற்திட்டத்தின் மொத்தச் செயற்சாதனை வருடாந்தம் மதிப்பீட்டுக்குட்படுத்தப்படுகின்றது. அவ்வாறு அமுல்படுத்தப்பட்ட பிரதான ஒப்பளவுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.


| பௌதீக முன்னேற்றங்கள் | சுகாதார மத்திய நிலையங்களின் எண்ணிக்கை | இலக்கு | இலக்கினை நிறைவேற்றல் |
|---|---|---|---|
| அபிவிருத்திச் செய்யப்பட்ட அவசர சிகிச்சை பிரிவு (ETUs), | 445 | 50% | 82% |
| அபிவிருத்தி செய்யப்பட்ட மகப்பேற்று மற்றும் சிறுவர் சுகாதார சிகிச்சை ( MCH) | 3646 | 95% | 95% |
| தாபிக்கப்பட்டுள்ள சுகாதார ஆரோக்கிய மத்திய நிலையம் ( HLCs) | 311 | 90% | 94% |
| மரண மற்றும் நோய் அறிக்கைப்படுத்தல் முறைமையினை அமுல்படுத்தும் சுகாதார பிரிவு (EIMMR) | 446 | 70% | 82% |
| தாபிக்கப்பட்டுள்ள தர முகாமைத்துவ அலகு ( QMUs,) | 73 | 90% | 95% |

## செயற்திட்ட முன்னேற்றம்


| செயற்திட்டப் பெறுமதி | மாகாணத்திற்கான உள்ளீட்டு நிதி | நிதி அறிக்கை |
|---|---|---|
| 26,000 ரூபா. மில் | 15,163.20 ரூபா. மில் | 14,028.00 ரூபா. மில் |

2018 ஆம் ஆண்டின் முன்னேற்றங்கள் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று

**நிதி முன்னேற்றம்**




**பௌதீக முன்னேற்றம்**



## 3.2.2.7. கிராமியப் பாலங்களின் நிர்மானச் செயற்திட்டங்கள்

### நோக்கம்

1. நாட்டின் தேசிய பொருளாதார முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு மக்களின் செயற்பாடுகள் மற்றும் வாழ்க்கைத் தரத்தின் பண்புசார் தரத்தை விருத்தி செய்தல்.
2. கிராமிய மக்களின் பொதுப் பாதுகாப்பினை விருத்தி செய்தல்.
3. கிராமியப் பிரதேசங்களில் இதுவரையில் பயன்படுத்தப்படாத வளங்களை உயர்ந்த பட்சம் பயன்படுத்துவதைப் போன்று கிராமிய சமூகத்தின் வாழ்க்கை நிலைமையினை விருத்தி செய்வதனை நோக்காகக் கொண்டு புதிய உற்பத்திச் சந்தர்ப்பங்களுக்காக அவர்களின் உள்நாட்டு அறிவினைப் பயன்படுத்தல்.

| | கட்டம் I | கட்டம் II | கட்டம் III |
|---|---|---|---|
| கடனுதவி வழங்கும் நிறுவனம் | ஐக்கிய இராட்சியம் | ஐக்கிய இராட்சியம் | நெதர்லாந்து |
| செயற்திட்ட செலவினம் (ரூபா.மில்) | 7,400.00 | 22,600.00 | 16,500.00 |
| செயற்திட்ட காலம் | 2013-2016 | 2014-2018 | 2014-2018 |
| அமுல்படுத்தப்படும் பிரதேசம் | முழு நாடு பூராகவும் | | |
| மொத்த பௌதீக முன்னேற்றங்கள் | 100% | 98% | 97% |
| மொத்த நிதி முன்னேற்றங்கள் (ரூபா.மில்) | 7372.87 | 22,246.11 | 16,258.83 |
| 2018 நான்காவது காலாண்டிற்கு நிதி இலக்கு / முன்னேற்றம் (ரூபா.மில்) | | 1500/2569.43 | 1000/1811.51 |
| 2018 நான்காவது காலாண்டிற்கு பௌதீக இலக்கு / முன்னேற்றம் | பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. | 100% / 98.4% | 100% / 97.4% |

| நிதி உதவி | மொத்தச் செலவினம் | 2018 க்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு ரூபா. மில் | நிர்மானிக்கப்படும் பாலங்களின் எண்ணிக்கை | பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட எண்ணிக்கை | நிதி முன்னேற்றம் (2018 ரூபா. மில்) | மொத்த நிதி முன்னேற்றம் (ரூபா.மில்) | மொத்த பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|---|
| ஐக்கிய இராட்சியம் கட்டம் I | 7,400 | | 210 | 210 | | 7372.87 | 100% |
| ஐக்கிய இராட்சியம் கட்டம் II | 22,600 | 1500 | 618 | 582 | 2568.03 | 22,244.71 | 98% |
| நெதர்லாந்து கட்டம் III | 16,500 | 1000 | 490 | 455 | 1529.71 | 15,977.03 | 97% |
| **மொத்தம்** | 46,500.00 | 2500 | 1318 | 1250 | 4,380.94 | 45,877.81 | |

இச் செயற்திட்டத்தின் முதலாவது கட்டத்தின் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. இரண்டாவது கட்டத்தின் கீழ் உரிய பணிகள் பூர்த்தி செய்யப்படாத பாலங்களின் எண்ணிக்கை 36 மற்றும் மூன்றாவது கட்டத்தின் கீழ் நிர்மானப் பணிகள் பூர்த்தி செய்யாத 35 பாலங்களின் நிர்மானப் பணிகள் இடம்பெறுகின்றன.

## 3.2.2.8. அறிவினைக் கேந்திரமாகக் கொண்ட பாடசாலைக் கல்வி முறைமையினை விருத்தி செய்யும் செயற்திட்டங்கள்

உலக வங்கியின் நிதி உதவியின் கீழ் ரூபா 13,000 மில்லியன் செலவினத்தை மேற்கொண்டு 2012 - 2018 கால எல்லைக்குள் அமுல்படுத்தப்பட்ட இச் செயற்திட்டத்தின் மூலம் சகல மாகாண சபைகளும் தழுவப்படுகின்றன. இச் செயற்திட்டத்தின் நோக்கமாக அமைவது அறிவினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியின் அடிப்படையில் ஆரம்ப மற்றும் இடைநிலை கல்வி தொடர்பிலான பிரவேசங்கள் மற்றும் அதன் பண்புசார் தரத்தினை விருத்தி செய்வதாகும். இதன் பௌதீக முன்னேற்றம் மற்றும் நிதி முன்னேற்றம் 100மூ மாகும்

கல்வி அமைச்சினால் தேசிய மட்டத்தில் இச் செயற்திட்டம் அமுல்படுத்தப்படுவதுடன் மாகாண மட்டத்தில் அமுல்படுத்தப்படுவது மாகாண சபை, மாகாணக் கல்வி அமைச்சு மற்றும் மாகாணக் கல்வித் திணைக்களம் ஊடாகவாகும். மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் செயற்திட்டத்தின் மாகாண சபைகளுக்குரிய பணிகள் இணைப்புச் செய்யப்படுகின்றன.

- இச் செயற்திட்டத்தின் கீழ் தற்போது 135 தொழில்நுட்ப விஞ்ஞான ஆய்வுகூடங்கள், 705 வகுப்பறைக் கட்டடங்கள், 30 வலயக் கல்வி அலுவலகங்கள் மற்றும் 58 கோட்டக் கல்வி அலுவலகங்களை நிர்மானிக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

- மொத்த அடிப்படையில் 16,750 கணணிகள், ஸ்கேனர், பிரின்டர்ஸ் போன்றன 13,650 கணணி உதிர்பாகங்கள், வகுப்பறை கதிரை மேசைகள் 113,900, அலுவலக மேசைகள் மற்றும் கதிரைகள் 14,032, அலுவலக உபகரணங்கள் (போட்டோ பிரதி இயந்திரம், பெக்ஸ், மல்டிமீடியா உபகரணங்கள் போன்றன) 1,410 மற்றும் 60 வாகனங்கள் (கப் வண்டி, வேன்) கொள்வனவு செய்து விநியோகிக்கப்பட்டுள்ளன.

- நிதி முகாமைத்துவம், பெறுகை, சூழல் முகாமைத்துவம், பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவம், பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி ஆகிய தொனிப்பொருளின் கீழ் மாகாண சபை உத்தியோகத்தர்கள், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் 4,590 பேர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

2017 ஜூன் மாதம் இறுதியில் பூர்த்தி செய்யத் திட்டமிடப்பட்டிருந்த இச் செயற்திட்டம் 2018 ஜூன் வரை ஒரு வருடத்தினால் நீடிக்கப்பட்டதுடன், அக்கால எல்லையில் முன்னைய ஆண்டுகளிலிருந்து முன்கொண்டு செல்லப்பட்ட பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன.

# 3.2.2.9. முன்னேற்றமடைந்து வரும் பிரதேசங்களில் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்யும் செயற்திட்டம் (RIDEP)

## செயற்திட்டத்தின் நோக்கம்

வடக்கு, கிழக்கு, வடமத்தி மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களில் இனங்காணப்பட்ட கிராமிய வீதியினை அபிவிருத்தி செய்தல், குடிநீர் வசதிகளை வழங்குதல் மற்றும் சிறிய உட்பட நடுத்தரளவு நீர்ப்பாசனத் திட்டங்களை விருத்தி செய்வது ஊடாக அப்பிரதேசங்களின் மக்களின் வாழ்வாதாரத்தை விருத்தி செய்வதும் அதன் மூலம் அப்பிரதேசங்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் காணப்படும் பொருளாதார அபிவிருத்தியின் பிரதேச முறன்பாடுகளை கட்டுப்படுத்துவது செயற்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். இதன் போது அரசாங்கத்தின் 2015 பொருளாதாரக் கொள்கை மற்றும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் வரவு செலவு வெளிப்பாடுகளுக்கமைய 30 ஆண்டு காலம் இடம்பெற்ற பாதக நிலைமைகளினால் பாதிக்கப்பட்ட மாகாணத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கும் பிரதேசங்களில் காணப்படும் அபிவிருத்தி முறன்பாடுகளை கட்டுப்படுவத்துவதும் முழுமையாக குறை அபிவிருத்தி கொண்ட மாகாணங்களில் பொருளாதார அபிவிருத்தி ஊடாக வறுமையினை கட்டுப்படுத்துவதும் நோக்கமான அமைந்தது.

விசேடமாக 2017 ஆம் ஆண்டு வறுமையை ஒழிக்கும் ஆண்டு என பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பின்னணியில் இந்நோக்கங்களை எட்டுவதற்காக செயற்திட்டத்தின் அபிவிருத்தி இலக்குகள் பிரதானமான அடிப்படையாக கொள்ளப்பட்டுள்ளன.

- **செயற்திட்டத்தின் கால எல்லை**

  2017 ஜூலை மாதம் தொடக்கம் 2021 டிசம்பர் வரையான அண்மித்த 05 ஆண்டு கால எல்லைக்குள்

- **செயற்திட்டம் அமுல்படுத்தப்படும் பிரதேசங்கள்**

  வடமாகாணம், வடமத்திய மாகாணம், ஊவா மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணம்

- **செயற்திட்ட பிரதேசங்களை தேர்ந்தெடுப்பதனை அடிப்படையாகக் கொண்ட ஒப்பளவுகள்**

  மாகாண மட்டத்தில் மொத்தத் தேசிய உற்பத்திக்கு காண்பிக்கும் பங்களிப்பு மட்டம் (GDP Share index) பிரதேச சபை) உள்ளூராட்சி மன்ற அதிகாரப் பிரதேசங்களில் வறுமை மட்டம்

- **மாகாண மட்டத்தில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள உப செயற்திட்டங்கள்**

| | மாகாணம் | | | | |
|---|---|---|---|---|---|
| உப செயற்திட்டங்கள் | வடக்கு | வடமத்தி | கிழக்கு | ஊவா | மொத்தம் |
| சிறிய மற்றும் நடுத்தரளவு நீர்ப்பாசனத்தை விருத்தி செய்யும் செயற்திட்டம் | 50 | 28 | 25 | 18 | 121 |
| கிராமிய வீதியினை நவீன மயப்படுத்தல் / விருத்தி செய்யும் செயற்திட்டம் | 85 | 40 | 44 | 55 | 224 |
| குடிநீர் மற்றும் குறைந்த வசதிகளை விருத்தி செய்யம் செயற்திட்டம் | 8 | 27 | 15 | 23 | 73 |
| மொத்தம் | 143 | 95 | 84 | 96 | 418 |

| | வெளிநாட்டு நிதி ஜப்பான் ஜென் மில்லியன் | | | உள்நாட்டு நிதி - ரூபா. மில்லியன் | | மொத்தம் - ஜப்பான் ஜென் மில்லியன் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Total | JICA | GOSL | Total | JICA | GOSL | Total | JICA | GO`SL |
| வட மாகாணம் | 0 | 0 | 0 | 3,200 | 3,200 | 0 | 2,259 | 2,259 | 0 |
| கிழக்கு மாகாணம் | 0 | 0 | 0 | 3,200 | 3,200 | 0 | 2,259 | 2,259 | 0 |
| வடமத்திய மாகாணம் | 0 | 0 | 0 | 3,200 | 3,200 | 0 | 2,259 | 2,259 | 0 |
| ஊவா மாகாணம் | 0 | 0 | 0 | 3,200 | 3,200 | 0 | 2,259 | 2,259 | 0 |
| Price escalation | 0 | 0 | 0 | 2,123 | 2,123 | 0 | 1,499 | 1,499 | 0 |
| Physical contingency எதிர்பாராத செலவினம் | 0 | 0 | 0 | 746 | 746 | 0 | 527 | 527 | 0 |
| ஆலோசனைச் செலவினம் | 0 | 0 | 0 | 1,516 | 1,516 | 0 | 1,070 | 1,070 | 0 |
| நிருவாகச் செலவினம் | 0 | 0 | 0 | 859 | 0 | 859 | 607 | 0 | 607 |
| VAT வரி | 0 | 0 | 0 | 2,578 | 0 | 2578 | 1,820 | 0 | 1,820 |
| நிர்மானக் கால எல்லைக்குள் கொடுப்பனவு | 825 | 825 | 0 | 0 | 0 | 0 | 825 | 825 | 0 |
| Front-end fee ஆரம்ப செலவினம் | 26 | 0 | 26 | 0 | 0 | 0 | 26 | 0 | 26 |
| மொத்தம் | 851 | 825 | 26 | 20,622 | 17,185 | 3,437 | 15,410 | 12,957 | 2,452 |

## செயற்திட்டம் நிதி அடிப்படையில்

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (ஜெய்கா) மூலம் வழங்கப்படும் பன்னிரெண்டாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது ஏழு மில்லியன் ஜப்பான் ஜென் (¥12,957,000,000) நிதி மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் மூவாயிரத்து நானூற்று முற்பத்து ஏழு மில்லியன் ரூபாவாகும்.

## செயற்திட்டத்தை அமுல்படுத்தும் முறைகள் மற்றும் நிறுவனக் கட்டமைப்பு

மாகாண சபை, உள்ளூராட்சி மன்ற மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்ட செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு கொழும்பில் அமைந்துள்ளதுடன் அதன் தேசிய செயற்திட்டப் பணிப்பாளரின் கீழ் செயற்திட்ட முகாமைத்துவப் பணியாளர் சபை சேவைக்கு நியமிக்கப்பட்டுள்ளது. அனைத்து மாகாணங்களிலும் மாகாண சபைகளினால் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனமாக பொறுப்பு வகிப்பதுடன், சகல மாகாணங்களிலும் மாகாண செயலாளரின் கீழ் தாபிக்கப்பட்ட செயற்திட்ட அமுலாக்கல் பிரிவு காணப்படுகின்றது.

இப்பிரிவுகளில் மாகாண செயற்திட்டப் பணிப்பாளராக செயற்படுவது உரிய மாகாண சபையின் பிரதி பொதுச் செயலாளர் திட்டமிடல் அமுலாக்கல் என்பதுடன் உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் மற்றும் உரிய மாகாணத்தின் நீர்ப்பாசனப் பணிப்பாளர் பிரதி செயற்திட்ட பணிப்பாளர்களாக செயற்படுகின்றனர்.

செயற்திட்டத்தின் மொத்த ஆலோசனைப் பணிகளுக்காக இரண்டு ஆலோசனை நிறுவனங்களின் கீழ் பணியாளர் சபை நியமிக்கப்பட்டுள்ளதுடன், இதன் பொறுப்பாளர்களாக குழுவின் தலைவர்கள் இருவர் தேசிய செயற்திட்டப் பணிப்பாளரின் கீழ் செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவில் நிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன் சகல மாகாணங்களிலும்

செயற்திட்டங்களை அமுல்படுத்தும் பிரிவுகளில் தங்கியுள்ள பொறியியலாளர்கள் மற்றும் அவர்களுக்குரிய பணியாளர் சபையுடன் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்குரியதாக பிரதேச சமூகத்தின் தலையீட்டுடன் உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் இனங்காணப்பட்ட உப செயற்திட்டங்களின் நிர்மானப் பணிகள் ஒப்பந்ததாரர்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. நிர்மானப் பணிகள் பூர்த்தியடைந்ததன் பின்னர் பராமரிப்பு மற்றும் செயற்பாடுகள் சமூக அமைப்பு அல்லது உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்குப் பொறுப்பளிக்கப்படவுள்ளன.

## செயற்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றங்கள்

2018 ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதியளவில் செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றங்கள்

- செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு மற்றும் மாகாண செயற்திட்டத்தை அமுல்படுத்தும் 04 பிரிவுகள் தாபிக்கப்பட்டுள்ளன.
- ஆலோசனை நிறுவனத்தை தேர்ந்தெடுக்கும் பெறுகைச் செயற்பாடுகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன.

  குடிநீர் வழங்கல் செயற்திட்டத்திற்கான ஆலோசனைப் பணிகளுக்குரிய ஆலோசனை நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டதுடன், ஜனாதிபதி மேன்முறையீட்டு குழு அறிக்கை கிடைக்கப் பெற்றதன் பின்னர் அது அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது.
- கிராமிய வீதி மற்றும் சிறிய நீர்ப் பாசனங்களை புனரமைப்பு செய்யும் செயற்திட்டங்களுக்காக ஆலோசனை நிறுவனமாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனம் ஜெய்கா நிறுவனத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- மாகாண மட்டத்தில் உப செயற்திட்டங்கள் பிரதேசங்களில் சமூகத்தை அறிவுறுத்தல் மற்றும் அடிப்படைத் தகவல்களை சேகரிப்பதற்கான இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றன.
- மாகாண செயற்பாட்டுக் குழுவைத் தாபித்து முதலாவது கூட்டம் நடாத்தப்பட்டுள்ளது.

## 2018 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் செயற்திட்டத்தின் நிதி முன்னேற்றம்

செயற்திட்டத்தின் நிருவாகச் செலவினத்திற்காக இலங்கை அரசாங்கத்தின் நிதியம் (GOSL) மூலம் 57.768 மில்லியன் செலவாகியுள்ளது. இந்நிதி மாகாண மற்றும் பிரதான அலுவலகத்தைத் தாபித்தல், அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் பணியாளர் சபைக் கொடுப்பனவிற்காக செலவிடப்பட்டுள்ளது. வெளிநாடு (JICA) நிதி மூலம் இதுவரையில் செலவுகள் மேற்கொள்ளப்படவில்லை.

இலக்கம் 01 : கிராமிய வீதி மற்றும் சிறிய, நடுத்தரளவு நீர்ப் பாசனத் தொகுதியினை விருத்தி செய்யும் செயற்திட்டம்

இலக்கம் 02 : குடிநீர் வழங்கல் வசதிகளை விருத்தி செய்யும் செயற்திட்டம்

## செயற்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றங்கள்/ 2018 ஆம் ஆண்டுக்குள் பூர்த்தி செய்யப்பட்ட பணிகள்

- செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு மற்றும் மாகாண செயற்திட்டத்தை அமுல்படுத்தும் 04 பிரிவுகள் தாபிக்கப்பட்டுள்ளன.
- ஆலோசனை நிறுவனத்தை தேர்ந்தெடுக்கும் பெறுகைச் செயற்பாடுகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன.

  குடிநீர் வழங்கல் செயற்திட்டத்திற்கான ஆலோசனைப் பணிகளுக்குரிய ஆலோசனை நிறுவனத்தை தேர்ந்தெடுக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டதுடன், அது அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது. வீதி மற்றும் நீர்ப்பாசன செயற்திட்டங்களுக்குரியதான ஆலோசனை நிறுவனங்களைத் தேர்ந்தெடுக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அது ஜனாதிபதி பெறுகை மேன்முறையீட்டு சபையின் மதிப்பீட்டுக்குட்படுத்தப்படவுள்ளது.
- தேசிய செயற்திட்ட செயற்பாட்டுக் குழு மற்றும் மாகாண செயற்திட்ட செயற்பாட்டுக் குழுவை தாபித்து அடிப்படை சந்திப்புக்கள் நடாத்தப்பட்டுள்ளன.
- செயற்திட்டத்தில் அறிவுறுத்தல்களை மேற்கொள்ளும் போது திட்டங்களை தயாரித்து அதற்கமைவாக மாகாண மட்டத்தில் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சமூகத்தை அறிவுறுத்தும் வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.
- இனங்காணப்பட்ட உப செயற்திட்டங்கள் உட்பட செயற்திட்ட அதிகார பிரதேசத்தில் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்குரியதான அடிப்படைத் தகவல்களை சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

# 3.3. தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ உதவி மத்திய நிலையம்

**நோக்கு** : **சகலருக்கும் மிகுந்த வசதிகொண்ட சூழல்**

**நோக்கம்** : உள்ளூராட்சி மன்ற அதிகாரப் பிரதேசங்களில் திண்மக் கழிவு முகாமைத்துவத்தை மேற்கொள்ளல்.

**செயற்பாடுப் பணிகள் :**

- உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கு முறையான மற்றும் பொருத்தமான திண்மக் கழிவு முகாமைத்துவச் செயற்பாடுகளை அறிமுகப்படுத்தும் வகையில் சட்டங்களை வகுத்தல் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்.
- திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான உரிய தொழில்நுட்ப உதவியினை உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கு வழங்குதல்.
- திண்மக் கழிவு முகாமைத்துவத்தின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அனுபவங்களை பரிமாறிக் கொள்வதற்காக உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களை ஊக்குவித்தல்.
- அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் நிதி நிறுவனங்களின் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கு உதவுதல்.
- உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்காக கழிவு முகாமைத்துவத்திற்கு தேவையான கட்டடங்கள், வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.
- 3R முறைகளை விருத்தி செய்தல். (Reduse, Reuse, Recycle)
- அறிவுறுத்தல் வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல்.
  - திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்காக சுகாதார தொழிலாளர் உத்தியோகத்தர்களுக்காக இயலுமை விருத்தி பயிற்சி செயலமர்வினை நடாத்துதல். (தேசிய பயற்சிச் சான்றிதழ் வழங்குதல்- (National Vocational Qualification NVQ2)
- சேதனப் பசளை தயாரிக்கும் புதிய முறையிலான தக்குறா முறை தொடர்பில் அறிவுறுத்தும் வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல்.
- திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்காக வாகனங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குதல்.
  - 09 மாகாணங்களைத் தழுவக்கூடிய வகையில் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்காக கழிவு முகாமைத்துவ போக்குவரத்து இயந்திரங்கள் கழிவுப் பொருட்களை கொண்டு செல்லும் இயந்திரங்கள் போன்றவற்றை வழங்குதல்.
- உள்நாட்டு நிதியத்தைப் பயன்படுத்தி 100 கம்பெக்டர் வண்டிகளை கொள்வனவு செய்தல்.
- கொரிய கடன் உதவித் திட்டத்தின் கீழ் 190 கம்பெக்டர் வண்டிகளை கொள்வனவு செய்தல்.

**விசேட செயற்திட்டங்கள்**

- ஜப்பான் தொழில்நுட்ப சேதனப் பசளை இயந்திர உபகரணங்களைத் தாபித்தல்.
- தற்போது இலங்கையில் தொழிலாளர் ஊழியத்தை பயன்படுத்தி சேதனப் பசளை உற்பத்திகள் மேற்கொள்ளப்படுவதுடன் அம்முறைக்குப் பதிலாக இயந்திர உபகரணங்களைப் பயன்படுத்தி வினைத்திறனுடன் மேற்கொள்ளப்படுகின்றது.
- நாட்டின் 09 மாகாணங்களைத் தழுவக்கூடியவாறு இயந்திர உபகரணங்கள் தாபிக்கப்படுகின்றது. இவ் இயந்திர உபகரணங்கள் மூலம் நாளொன்றுக்கு (50) டொன் கழிவுப் பொருட்கள் சேதனப் பசளையாக மாற்றப்படுவதுடன் 50 உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களில் உக்கக்கூடிய கழிவுப் பொருட்களுக்காக தீர்வுகள் வழங்கப்படுகின்றன. மேலும் இதன் உற்பத்தியின் பண்புசார் தரத்தை மேம்படுத்துவதற்காக சேதனப் பசளைக்காக சந்தை வாய்ப்பினை அறிமுகப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

| மாகாணங்கள் | | இயந்திரங்கள் தாபிக்கப்படும் இடங்கள் |
|---|---|---|
| மேல் மாகாணம், | - | பேருவள நகர சபையின் பொதுமக்களின் எதிர்ப்புக்கள் காரணமாக காலி நகர சபைக்கு வழங்கப்பட்டது. |
| வடமத்திய மாகாணம், | - | லங்காபுர பிரதேச சபை - சுங்காவில் கழிவு முகாமைத்துவ மத்திய நிலைய வளாகம் |
| மத்திய மாகாணம், | - | தம்புள்ள நகர சபை - திகம்பத்தக பிரதேச சபை |
| சப்ரகமுவ மாகாணம், | - | கேகாலை நகர சபை - ஆடியகேன கழிவு வெளியேற்றும் இடம் |
| தென் மாகாணம், | - | ஹம்பாந்தோட்டை நகர சபை - சாலியபுர கழிவு வெளியேற்றும் இடம் |
| வடமேல் மாகாணம், | - | குருநாகல் பிரதேச சபை - சுந்தராபுர கழிவு வெளியேற்றும் இடம் |
| கிழக்கு மாகாணம், | - | அட்டாளைச்சேனை பிரதேச சபை - அஸ்ரப் நகர் கழிவு வெளியேற்றும் இடம் |
| ஊவா மாகாணம், | - | பதுளை பிரதேச சபை - வேவெஸ்ச தோட்டம் (பொது எதிர்ப்புக்களுக்கு மத்தியில் கைவிட வேண்டி ஏற்பட்டது) இச் செயற்திட்டம் கிழக்கு மாகாணத்தின் காத்தான்குடி நகர சபைக்கு வழங்கப்பட்டது. |
| வடமாகாணம், | - | வடமாராட்சி தென்மேற்கு பிரதேச சபை - வடமாராச்சி தென்மேற்கு கழிவு வெளியேற்றம் இடம் |

- கொழும்பு மற்றும் சனநெரிசல் கொண்ட பிரதேசங்களில் கழிவு முகாமைத்துவம் தொடர்பான செயற்சாதனை அணி மற்றும் செயற்பாட்டுக் குழுவினைத் தாபித்தல்.
    - பொதுமக்களின் முறைப்பாடுகளை பெற்றுக் கொள்வதற்காக 1917 என்ற தொலைபேசி ஊடாக தொடர்பு கொள்ளத் தேவையான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
    - கிடைக்கும் முறைப்பாடுகளை துரிதகதியில் தீர்ப்பதற்காக முப்படையினர் மற்றும் சுற்றாடல் பொலிஸ் உத்தியோகத்தர்களினால் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
    - முறையற்ற ரீதியில் கழிவுப் பொருட்களை வெளியேற்றுவது தொடர்பில் முறைப்பாடுகளை பெறும் போது அது தொடர்பில் சட்ட ரீதியிலாக செயற்பட சூழல் பொலிசாரினால் நடவடிக்கை எடுத்தல்.
    - முப்படை உத்தியோகத்தர்களினால் கொழும்பு மற்றும் சன நெரிசல் கொண்ட பிரதேசங்களின் வீதிகள் மற்றும் குறுக்கு வீதிகளில் சட்ட விரேதமாக கழிவுப் பொருட்கள் வெளியேற்றல், வீதியில் காணப்படும் விபத்து அபாய நிலைமைகள் தொடர்பிலும் அறிக்கையினைச் சமர்ப்பித்தல் மற்றும் அதனைத் திருத்தியமைப்பதற்கு உரிய நிறுவனங்களுக்கு அனுப்புதல்.

## டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

நாட்டில் டெங்கு அபாயம் கொண்ட சூழலை கட்டுப்படுத்துவதற்கு நிறுவனங்களை அறிவுறுத்தி தேவையான வேலைத்திட்டங்களை வகுத்து அவற்றைத் தொடர்ந்தும் அமுல்படுத்துவதற்கு உதவிகளை வழங்குவதன் மூலம் டெங்கு அற்ற சூழலை கட்டியெழுப்புவதற்கும் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கு உதவுதல்.

***திண்மக் கழிவு முகாமைத்துவ முன்னேற்றம் (2018.12.31 ஆம் திகதியன்று) தேசிய மற்றும் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவச் செயற்திட்டம்***

| இல | செயற்திட்டம் | மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா. மில் | உண்மையான செலவினம் ரூபா. மில் | உண்மை யான பௌதீக முன்னே ற்றம் |
|---|---|---|---|---|
| 01 | 2017 ஆம் ஆண்டில் செலுத்தாத கட்டணம் மற்றும் தொடர்ச்சியாக | 585 | 569.3 | 100% |
| 02 | ஜப்பான் தொழில்நுட்ப சேதனைப் பசளை இயந்திரத்தைத் தாபித்தல் | 665 | 281.2 | 75% |
| 03 | 100 கெம்பெக்டர் இயந்திரங்களை கொள்வனவு செய்தல் | 600 | | 90% |
| 04 | அரச மற்றும் தனியார் துறையுடன் இணைந்து அமுல்படுத்துவதற்கான செயற்திட்டம் | 50 | | 20% |
| மொத்தம் | | 1900 | 850.5 | |

# 3.4. உள்ளூராட்சி மன்றப் பிரிவு

## 01. நோக்கம் :

பிரதேச வளங்கள் மற்றும் சக்திகளை கூட்டாக இணைந்து பிரதேச அடையாளங்களை பாதுகாக்கும் வகையில் சுயபலத்துடன் செயற்படக்கூடிய நிறுவனமாக மாற்றியமைக்கும் அபிலாசையுடன் அபிவிருத்தி இலக்குகளை எட்டி தமக்கு வழங்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் அதிகாரங்களை வெற்றிகரமாக அமுல்படுத்தும் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களை உருவாக்குவதற்காகத் தேவையான தேசிய மட்டத்திலான மேற்பார்வைப் பணிகளை முன்னெடுத்தல்.

**மூல உபாயத் திட்டங்கள் :**

01. சிறந்த நிருவாக மூல அம்சங்களுக்கமைய அவ்வவ் மாகாணங்களில் காணப்படும் மானிட வள மூலதனம் மற்றும் சூழல் வளங்களை உற்பத்தித்திறன் மிக்கதாக பயன்படுத்தி வருமான வகைகளை உரிய முறையில் பலப்படுத்தல்.

02. வெளி குடிவரவு விகிதாசாரம் ஒப்பீட்டு ரீதியில் உயரிய மட்டத்தில் காணப்படும் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களில் அதனை மட்டுப்படுத்துவதற்கு பொருத்தமான கொள்கைகள் மற்றும் நீண்ட கால வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்தல்.

03. இலங்கையின் மொத்த சமூக, பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகளின் பாதுகாப்பு கருதி அவ்வவ் மாகாணங்களில் காணப்படும் மானிட வளத்தின் பயன்பாட்டினை உறுதிப்படுத்தல்.

## 02. பின்னடைந்த உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் வருமானத்தை ஈட்டும் வேலைத்திட்டங்களை ஊக்குவிக்கும் செயற்திட்டங்கள்

உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் “வருடாந்த வருமானம்” என்ற ஒப்பளவுக்கு அமைய மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு 10 மில்லியனை விடக் குறைந்த வருடாந்த வருமானம் கொண்ட உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் பின்னடைந்த உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களாக கருதி இதற்காக அமுல்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்களை மறுசீரமைத்து உள்ளூராட்சி மன்ற நிறுனவங்கள் (பிரதேச சபைகள்) 271 ஐ கருத்திற் கொண்டு உரிய சமூக பொருளாதாரப் பிரிவினை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடியவாறு 20 ஒப்பளவுகளுக்காக புள்ளிகளை வழங்கி மதிப்பீட்டுக்குட்படுத்துவதன் மூலம் 100 உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களில் ”பின்னடைந்த உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள்” என தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இப்பின்னடைந்த உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் வருமான வகைகளை விருத்தி செய்வதன் மூலம் அபிவிருத்திப் பின்னனியினை நீண்ட காலமாக பலப்படுத்துவதை நோக்காகக் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னடைந்த 100 உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் மூலம் கீழ்வே குறிப்பிடப்பட்டுள்ள பிரதான 04 துறைகளுக்குரியதான செயற்திட்ட யோசனைகளைக் கோரி இவ் “வருமானத்தை ஈட்டும் வேலைத்திட்டங்களை ஊக்குவிப்பும் செயற்திட்டம்” இற்காக பொருத்தமான செயற்திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

i. வர்த்தகக் கட்டடத் தொகுதியினை நிர்மானிப்பதற்குரியதான செயற்திட்டம்

ii. சுற்றுலா வர்த்தகம் சார்ந்த செயற்திட்டம்

iii. சிறிய நகர் / சன நெரிசல் கொண்ட பிரதேசங்களை சார்ந்த மலசலகூட வசதிகளை விருத்தி செய்வதற்குரியதான செயற்திட்டம்

iv. வருமானத்தை ஈட்டக்கூடிய ஏனைய செயற்திட்டங்கள்

## 2.1. 2018 ஆம் ஆண்டுக்காக அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்கள்

**செயற்திட்டத்தின் மொத்தப் பெறுமதி - ரூபா 100 மில்லியன்**

### 2.1.1. சீதாவக்க பிரதேச சபை

- செயற்திட்டத்தின் பெயர் : துன்னான பொது மயானத்தை நிர்மானித்தல்
- செயற்திட்டத்தின் பிரதான நோக்கம் : சீதாவக்க பிரதேச சபையின் மயானத்தில் ஏற்படக்கூடிய தொழில்நுட்பக் கோளாறுகளுக்கு மாற்றுச் செயற்பாட்டு வழங்கல் மற்றும் மயானத்தில் ஏற்படக்கூடிய நெரிசலை கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுத்தல்.
- செயற்திட்டத்தின் ஏனைய நோக்கங்கள் : I. மயான சேவையினை விரிவுபடுத்தல்.

  II. ஹோமாகம பிரதேச சபையின் மயானம்

  ஈடுபடுத்த வேண்டிய சந்தர்ப்பங்கள்

  மயானம் தொடர்பான ஈடுபாடுகள் மற்றும் அதன் மூலம் சபைக்கு வருமானத்தை அதிகரித்தல்.
- செயற்திட்டத்தின் பெறுமதி : 17.8 மில்லியன் ரூபா
- நேரடி மற்றும் மறைமுக பயனாளி எண்ணிக்கை : சுமார் 18,000

### 2.1.2. அம்பன்கஹகோரளை பிரதேச சபை

- செயத்திட்டத்தின் பெயர் : மெடிஹக்க பழைய நூலகக் கட்டடம் வர்த்தக இடமாக மாற்றியமைத்து அபிவிருத்தி செய்தல்
- செயற்திட்டத்தின் பிரதான நோக்கம் :
  - i. பிரதேச சபையின் வருமான மட்டத்தை 5% தினால் மேம்படுத்தல்.
  - ii. பிரதேச சபையின் சொத்துக்களை உரிவயாறு அபிவிருத்தி செய்தல்.
  - iii. பொதுமக்களின் பொதுப் பயன்பாட்டு சேவையினை மேம்படுத்தல்.
  - iv. மக்களின் அடிப்படைத் தேவைகளுக்காக நகரங்களில் குடியேறுவதை கட்டுப்படுத்தல்.
  - v. மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்.
- செயற்திட்டத்தின் மொத்தப் பெறுமதி : 19.72 மில்லியன் ரூபா
- நேரடி மற்றும் மறைமுக பயணாளிகளின் எண்ணிக்கை : சுமார் 2000

## 03. கட்டக்காலி நாய்களினால் மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை தடுப்பதற்கான முறைகளை வகுத்தல்.

கட்டக்காலி நாய்களினால் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை தடுப்பதற்காக பொருத்தமான முறைகளை வகுப்பதற்காக அமைச்சரவையினால் 2019.04.19 ஆம் திகதிய அமைச்சரவை கூட்டத்தில் அப்போதைய மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சு, சுகாதாரப் போசாக்கு மற்றும் உள்நாட்டு வைத்தியத்துறை அமைச்சு உட்பட கிராமிய பொருளாதார அமைச்சு ஆகிய 03 அமைச்சுக்களின் செயலாளர்களை கொண்ட தேசிய செயற்பாட்டுக் குழுவினை நியமிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மேற்கூறப்பட்ட குழுவினால் கீழ்க் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

i. நாய்களின் வளர்ச்சியை கட்டுப்படுத்துவது தொடர்பில் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கு சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை அமுல்படுத்துவதற்கு காணப்படும் தடைகள்.

ii. 2012 ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் வழங்கப்பட்ட தீர்மானங்களை அமுல்படுத்துவது தொடர்பில் எழுந்துள்ள தடைகள்.

iii. மாகாண சபையில் இக்கட்டமைப்பை உள்ளடக்கும் போது மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் உரிய பணிகளுடன் இனங்காணுதல்.

iv. ஒதுக்கீடுகளை மேற்கொள்ளல்.

v. நாய்கள் தடுத்து வைக்கப்படும் மத்திய நிலையத்தைத் தாபித்தல்.

vi. தற்போது நாடுபூராகவும் நாய்கள் தொடர்பில் புள்ளிவிபரங்களை மேற்கொள்ள வேண்டியதன் தேவை.

எனவே நாய்களுக்கு மருந்து ஊசி ஏற்றுதல் மற்றும் மலட்டுத் தன்மையாக்கும் வேலைத்திட்டங்கள் 2018 ஏப்ரல் 01 ஆம் திகதி தொடக்கம் முழுமையாக சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சிலிருந்து பொறுப்பினை நீக்கி கிராமிய பொருளாதாரம் தொடர்பான அமைச்சின் கீழ் அமுலில் உள்ள கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், சகல மாகாண சபைகளின் கீழும் விசேட வேலைத்திட்டமாக அமுல்படுத்த ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இவ் வேலைத்திட்டத்தின் முன்னேற்ற மீளாய்விற்காக மீளத் தகவல்கள் கோரப்பட்டுள்ளன.

## 04. புதிய உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களைத் தாபித்தல்/ தரமுயர்த்துதல்

இலங்கையில் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களைத் தாபிப்பது தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட முறைகள் அல்லது கொள்கைகள் இன்மையினால் புதிதாக உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களைத் தாபிப்பதைப் போன்று காணப்படும் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களை தரமுயர்த்தும் செயற்பாடுகள் முறையாக இடம்பெறுவதில்லை என மேற்பார்வை செய்யப்பட்டுள்ளமையினால் மற்றும் அது இலங்கையின் நகரமயமாக்கல் விகிதாசாரத்தை குறைந்த பெறுமதி (18.25 - 2012 குடிசன புள்ளிவிபரங்களுக்கமைய) காண்பிக்கும் போது மறைமுகமாக தாக்கம் செலுத்துவதனால் புதிய உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களைத் தாபித்தல் மற்றும் காணப்படும் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களை தரமுயர்த்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட முறைகளை வகுக்கும் நோக்குடன் அதற்குரியதான தேசிய ஒப்பளவு முறைமையினை பரிந்துரை செய்வதற்காக அப்போதைய மாகாண சபை, உள்ளூராட்சி மன்ற விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரினால் 2016.05.25 ஆம் திகதி 05 அங்கத்தவர்களை கொண்ட நிபுனத்துவ குழு நியமிக்கப்பட்டது.

இதற்கமைய புதிய உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களைத் தாபிக்கும் போது மற்றும் காணப்படும் உள்ளூராட்சி மன்றங்களை தரமுயர்த்தும் போது கீழ்க் குறிப்பிட்ட அடிப்படை விடயங்கள், ஒப்பளவாக அங்கீகரிக்க முடியும் என அக்குழுவினால் பரிந்துரை செய்யப்படுவதுடன், அவ் அடிப்படை ஒப்பளவுகளின் கீழ் காணப்படும் 12 அபிவிருத்திச் சுட்டிகளுக்கமைய புள்ளி வழங்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. சனத்தொகை எண்ணிக்கை மற்றும் சனத்தொகை வளர்ச்சி

ii. வீடுகளின் எண்ணிக்கை மற்றும் வளர்ச்சி

iii. சேவை வழங்கல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் விருத்தி

iv. வர்த்தக மற்றும் கைத்தொழில் நிறுவனங்களைப் பரவலாக்கல்

v. வேலைவாய்ப்பு

vi. உத்தேச நிறுவனத்தின் அதிகாரப் பிரதேசத்தில் சுயமாக பெறக்கூடிய வருமானங்கள்

அவ்வாறு வழங்கப்படும் புள்ளிகளின் விகிதாசாரத்திற்கமைய எவையேனும் உள்ளூராட்சி மன்ற நிறுவனத்தை கூட்டிணைத்தல்/ தரமுயர்த்தும் இயலுமைகள் தொடர்பாக கீழ்க் குறிப்பிட்டவாறு தீர்மானிக்க முடியும்.

i. 80 புள்ளிகளை விட அதிகரிக்கும் சந்தர்ப்பம் - கூட்டிணைத்தல்/ தரமுயர்த்த முடியும்.

ii. 70% - 80% திற்கு இடைப்பட்டதற்கான புள்ளிகளுக்கான வாய்ப்பு - விசேட விடயங்கள் இருப்பின் அது தொடர்பில் கருத்திற் கொண்டு கூட்டிணைத்தல்/ தரமுயர்த்த முடியும்.

iii. 70% புள்ளிகளை விடக் குறைந்த சந்தர்ப்பம் - கூட்டிணைத்தல் - தரமுயர்த்த முடியாது.

இதற்கமைய கீழ்க் குறிப்பிட்ட விஞ்ஞான முறைகளை அடிப்படையாகக் கொண்ட 2017 ஆம் ஆண்டில் 06 பிரதேச சபைகளின் கீழ்க் குறிப்பிட்டவாறு புதிய உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் கூட்டிணைக்கப்பட்டன.

| மாகாணங்கள் | மாவட்டங்கள் | காணப்பட்ட உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் | புதிய உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் |
|---|---|---|---|
| மத்திய | நுவரெலியா | அம்பகமுவ பிரதேச சபை | மஸ்கெலிய பிரதேச சபை |
| | | | நோர்வூட் பிரதேச சபை |
| | | | அம்பகமுவ பிரதேச சபை |
| | | நுவரெலியா பிரதேச சபை | கொடகல பிரதேச சபை |
| | | | அக்கரப்பத்தன பிரதேச சபை |
| | | | நுவரெலிய பிரதேச சபை |

09 மாகாணங்களின் 23 மாவட்டங்களுக்குரியதாக கிடைக்கப் பெற்ற இவ்வாறான 46 யோசனைகளுக்காக மாவட்டக் குழுவின் பரிந்துரை கிடைக்கப் பெற்றுள்ளதுடன் இது தொடர்பில் 2019 முதல் 03 மாதத்திற்குள் மாகாண மட்டத்தில் கலந்துரையாடலை நடாத்தி தீர்மானங்களை எட்டுவதற்காக உரிய செயற்பாடுகள் வகுக்கப்படுகின்றன.

## 05. பொதுநலவாய சபை உள்ளூராட்சி மன்ற அமைப்பின் கருத்தரங்கு - 2019

பொதுநலவாய சபை நாடுகளைப் போன்று சர்வதேச மட்டத்தில் இலங்கையின் உள்ளூராட்சி மன்ற கட்டமைப்பிற்குள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட முற்போக்கு மாற்றங்கள் தொடர்பில் விளக்கத்தினை வழங்குவதற்கு வாய்ப்பினை உருவாக்குதல் மற்றும் இலங்கையின் உள்ளூராட்சி மன்ற துறையில் இடம்பெறக்கூடிய பண்புசார் தர மாற்றங்கள் தொடர்பில் சர்வதேச ரீதியில் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கு வாய்ப்பினை பெற்றுக் கொள்ளும் நோக்குடன் பொதுநலவாய சபையின் உள்ளூராட்சி மன்ற அமைப்பின் “Citizen Centered Local Government : Driving Inclusive Social and Economic Change” என்ற தொனிப்பொருளின் கீழ் 2019 ஜூன் மாதம் 11-14 வரையான தினங்களில் பண்டாரநாயக்க சர்வதேச கருத்தரங்கு மாநாட்டு மண்டபத்தில் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கு நாட்டில் நடாத்துவதற்குரியதான உத்தியோகபூர்வ வெளியீடு 2018 செப்ரெம்பர் 25 ஆம் திகதியன்று அப்போதைய மாகாண சபை உள்ளூராட்சி மன்ற மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் கௌரவ பைசர் முஸ்தபா அவர்களின் தலைமையில் மற்றும் பொதுநலவாய சபையின் உள்ளூராட்சி மன்ற அமைப்பின் செயலாளர் நாயகம் கலாநிதி பிரேக் முன்றோ உள்ளிட்ட உள்நாட்டு வெளிநாட்டு அதிதிகளின் பங்கேற்புடன் நடாத்தப்பட்டது.

## 06. அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மற்றும் தீர்மானங்கள் தொடர்பில் செயற்படுதல்.

2018 ஆம் ஆண்டுக்குள் கீழ்க் குறிப்பிடப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக கீழ்க் குறிப்பிட்ட தினங்களில் அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| தொ. இல | அமைச்சரவை விஞ்ஞாபனம் | அமைச்சரவைத் தீர்மானம் |
|---|---|---|
| I. | புதிய உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களை கூட்டிணைத்தல் மற்றும் காணப்படும் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களை தரமுயர்த்தல் | அ.வி/18/0424/744/011<br>2018 மார்ச் 27 |
| II. | புதிதாக கூட்டிணைக்கப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக வசதிகளை வழங்குதல் | அ.வி /18/1468/837/005<br>2018 ஜூன் 25 |
| III. | சகோதர நகர அல்லது நட்புறவு நகர சிந்தனையின் கீழ் இலங்கையில் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கிடையில் உடன்படிக்கை / புரிந்துணர்வு உடன்படிக்கையினை கைச்சாத்திடல் | அ.வி /18/2679/913/001<br>2018 நவம்பர் 21 |
| IV. | 2018 உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு வசதிகளை வழங்குதல். | அ.வி /18/0204/744/004<br>2018 பெப்ரவரி 14 |

## 07. பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் பிரச்சினைகள்

### 7.1. பாராளுமன்றக் கேள்வி

மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் பதில் எதிர்பார்ப்புடன் சமர்ப்பிக்கப்படும் பிரச்சினைகள் உரிய மாகாண பிரதம செயலாளர்களுக்கு அனுப்பப்பட்டு அம்மாகாணங்களிலிருந்து பெற்றுக்கொள்ளும் மேற்பார்வைகளுக்கமைய பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் அவ்வாறு 2018 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட பாராளுமன்றக் கேள்விகளின் எண்ணிக்கை 13 ஆகும்.

2018 ஆம் ஆண்டில் கீழ்க் குறிப்பிட்ட மாகாணங்களிலிருந்து பாராளுமன்றக் கேள்விகள் சமர்ப்பிக்கப்பட்டன.

| மாகாணம் | கேள்விகளின் எண்ணிக்கை |
|---|---|
| மேற்கு | 1 |
| வடமேல் | 4 |
| வடமத்தி | 3 |
| மத்தி | 1 |
| சப்ரகமுவ | 1 |
| அனைத்து மாகாணங்களுக்குமுரிய | 3 |
| **மொத்தம்** | 13 |

### 7.2. பொதுமக்கள் மனு செயற்குழு

உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களினால் தமது தேவைகளை நிறைவேற்ற முடியாத ஒரு சில நபர்கள் மற்றும் குழுக்களினால் பொதுமக்கள் முறைப்பாட்டாளர் சபை ஊடாக சமர்ப்பிக்கப்படும் மனுக்களுக்காக உள்ளூராட்சி மன்ற ஆணையாளர்களின் தகவல்களை பெற்று அந்நபர்களுக்கு நிவாரணங்களை வழங்கக்கூடிய வகையில் தலையீட்டாளராக செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களில் சேவையாற்றும் ஒரு சில உத்தியோகத்தர்களினால் நிறுவன மட்டத்தில் தீர்க்கப்படாத நிருவாகப் பிரச்சினையாக பொதுமக்கள் மனு செயற்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படக்கூடிய சந்தர்ப்பங்களை காண முடிகின்றது. அவ்வாறு சமர்ப்பிப்புகளுக்காக தீர்வுகளை வழங்குவதற்கும் உரிய உள்ளூராட்சி மன்ற ஆணையாளர்கள் ஊடாக தகவல்கள் மற்றும் பரிந்துரைகளைப் பெற்று தலையீட்டாளராக செயற்பாடுகள் மேற் கொள்ளப்படுகின்றன. அவ்வாறு 2018.12.31 வரை பொதுமக்கள் மனு செயற்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை 04 ஆகும்.

| மாகாணம் | கேள்விகளின் எண்ணிக்கை |
|---|---|
| மேற்கு | 2 |
| தெற்கு | 2 |
| மொத்தம் | 4 |

## 08. பொதுமக்களின் மனுக்களை விசாரனைக்குட்படுத்தல்

இலங்கையில் 09 மாகாணங்களில் அமைந்துள்ள உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களினால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் தொடர்பில் அதிர்ப்தி அடையும் பொதுமக்கள், சிவில் அமைப்புக்களினால் இவ் அமைச்சிற்கு நாளாந்தம் முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் பொதுமக்கள் முறைப்பாடுகள், (எழுத்து மூலம்/ வாய் மூலம்) உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கு இணைப்பு செய்து தாபிக்கப்பட்டுள்ள முறைப்பாட்டு விசாரனைக் குழுவினால் ஆராய்ந்து உரியவாறு மாகாணப் பிரதம செயலாளர்/ உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் / உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் பொறுப்பாளர்களுக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

2018 ஆம் ஆண்டில் டிசம்பர் 31 ஆம் திகதி வரை அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 669 ஆகும்.

| மாகாணம் | கேள்விகளின் எண்ணிக்கை |
|---|---|
| மேற்கு | 262 |
| மத்தி | 70 |
| தெற்கு | 95 |
| வடமத்தி | 40 |
| சப்ரகமுவ | 46 |
| கிழக்கு | 41 |
| வடமேல் | 60 |
| ஊவா | 33 |
| வடக்கு | 22 |
| **மொத்தம்** | 669 |

## 09.சகோதர நகர அல்லது நட்புறவு நகர யோசனைத் திட்டத்தின் கீழ் இலங்கையின் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கிடையிலான உடன்படிக்கை/ புரிந்துணர்வு உடன்படிக்கையினை கைச்சாத்திடல்.

இலங்கை சுதந்திரம் பெற்றது தொடக்கம் "சகோதர நகர அல்லது நட்புறவு நகர" எண்ணக்கருவின் கீழ் உள்ளூராட்சி மன்ற பொறுப்பாளர்களினால் வெளிநாடுகளில் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுடன் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும் ஜனாதிபதி செயலாளரினால் 2007 ஜூலை மாதம் 03 ஆம் திகதி வெளியிடப்பட்ட மற்றும் 2011 ஜனவரி மாதம் 14 ஆம் திகதி மீள வெளியிடப்பட்ட இலக்கம் SP/CSA/05/07 கொண்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளை மீறி மற்றும் வெளிநாட்டு இணைப்புக்கள் தொடர்பிலான உணர்வுகள் மற்றும் / அல்லது சட்ட ரீதியிலான அங்கீகாரங்கள் தொடர்பில் எனது அமைச்சு உட்பட வெளிவிவகார அமைச்சின் முழுமையான ஆலோசனைகள் இன்றி இலங்கையில் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களினால் வெளிநாடுகளின் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுடன் உடன்படிக்கை செய்துகொள்ள மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கைகளை எட்டுவதனால் வெளிநாடுகளிலிருந்து பெற்றக் கொள்ளப்பட்ட ஒரு சில வழங்கல்களை பயன்படுத்த முடியாத வேளையில் பொதுத் திறைசேரி திணைக்களத்தில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

எனவே இவ்வாறான பிரச்சினைகளுக்குரிய நிலைமைகளைத் தடுப்பதற்காக துரித செயற்பாடுகளை அமுல்படுத்தும் நோக்குடன் இலக்கம் CP/2018/49 மற்றும் 2018.10.19 ஆம் திகதிய "சகோதர நகர அல்லது நட்புறவு நகர எண்ணக்கருவின் கீழ் இலங்கையில் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் மற்றும் வெளிநாடுகளின் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கிடையே உடன்படிக்கை/ புரிந்துணர்வு உடன்படிக்கையினை கைச்சாத்திடல்" என்ற தொனிப்பொருளில் அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டு 2018.11.21 ஆம் திகதி நடாத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவை விஞ்ஞாபன அங்கீகாரத்துடன் இலக்கம் அ.வி/18/2679/913/001 மற்றும் 2018.11.28 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

# 3.5. மாகாண சபைப் பிரிவு

**நோக்கம்**

மாகாண சபைகளின் செயற்பாடுகளுக்கு வசதிகளை வழங்குதல், மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபைகளுக்கிடையே இணைப்புக்கள் உட்பட மாகாண சபைகளின் மானிட வளத்தை விருத்தி செய்து உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறன்மிக்க மாகாண சபை நிருவாக முறையினை ஏற்படுத்தல்.

## உபாயத் திட்டங்கள்

1. இலங்கையில் முழுமையான சமூக பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டின் பாதுகாப்பிற்காக அவ்வவ் மாகாணங்களில் காணப்படும் மானிட வளத்தின் பயன்பாட்டினை உறுதிப்படுத்தல்.
2. நல்லாட்சி மூல அம்சங்களுக்கமைய அவ்வவ் மாகாணங்களில் காணப்படும் மானிட மூலதனம் மற்றும் சூழல் வளத்தினை பயன்மிக்கதாக பயன்படுத்தி மாகாண வருமான வகைகளை பலப்படுத்தல்.
3. வெளிக் குடியேற்றங்களின் விகிதாசாரம் ஒப்பீட்டு அடிப்படையில் உயரிய மட்டத்தில் காணப்படும் மாகாண சபைகளில் அவ் விகிதாசாரத்தை கட்டுப்படுத்த பொருத்தமான கொள்கைகள் மற்றும் நீண்ட கால வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்தல்.

## 2018 ஆம் ஆண்டின் 4 வது காலாண்டு இறுதியில் மாகாண சபைப் பிரிவின் முன்னேற்றங்கள்

**01. வடமாகாணத்தில் அமுல்படுத்தப்படும் அம்மச்சி வேலைத்திட்டம் (வரவு செலவு யோசனை)**

2018 வரவு செலவு யோசனைக்கமைய அமுல்படுத்தப்பட்டுள்ள அம்மச்சி வேலைத்திட்டத்தின் கீழ் வடமாகாணத்தின் சம்பிரதாய மற்றும் போசாக்கு உணவினை உற்பத்தி செய்தல் உட்பட சந்தைப்படுத்தக்கூடிய 05 மத்திய நிலையங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 5,781,079.39 நிதி வட மாகாண முதலமைச்சின் செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

**02. மாகாணங்களுக்கிடையிலான விடய இணைப்பு மாநாடு**

மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் உரிய நிறுவனங்களின் பிரதிநிதிகளின் கூட்டம் 4 தடவைகள் நடாத்தப்பட்டன.

**03. மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்களை தொடர்புபடுத்தக்கூடிய தகவல்களை காலாண்டு அடிப்படையில் சமகாலப்படுத்தல்.**

மாகாணங்களிலிருந்து தகவல்களை பெற்று அத் தகவல்கள் காலாண்டு அடிப்படையில் சமகாலப்படுத்தப்பட்டுள்ளது.

**04. காணி சுவிகரிப்பு (மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்காக)**

காணி சுவிகரிப்புக்குரியதாக சகல மாகாணங்களிலிருந்தும் 383 கோரிக்கைகள் இவ் அமைச்சிற்கு பிரதம செயலாளர்களின் பரிந்துரையுடன் அனுப்பப்பட்டுள்ளதுடன் உரியவாறு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் எதிர்வரும் செயற்பாடுகளுக்காக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. குறைபாடுகளுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களை குறைபாடுகளை தீர்த்து சமர்ப்பிக்குமாறு மாகாண பிரதம செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1964 இலக்கம் 28 கொண்ட காணி சுவிகரிப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் உத்தரவுகளை வெளியிடுவது தொடக்கம் எதிர்காலச் செயற்பாடுகளுக்காக பிரதம செயலாளரின் பரிந்துரையுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 125 கோரிக்கைகள் உட்பட ஆவணங்களுடன் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சிற்கு சமர்ப்பிக்கவும் 4 வது பிரிவிற்கமைய எதிர்ப்பு விசாரனைகளை நடாத்துவதற்காக மாகாண பிரதம செயலாளர்களின் பரிந்துரையுடன் 12 உத்தியோகத்தர்களை நியமிக்கவும் 38(அ) இடைக்கால உத்தரவின் கீழ் காணி சுவிகரிப்பிற்குரியதாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சிற்கு 8 பரிந்துரைகளை சமர்ப்பிக்கவும் 39(அ) முதலாவது வாசகத்தின் கீழ் காணி பொறுப்பளிப்புக்கள் மூன்று மற்றும் 50(1) வாசகத்தின் கீழ் 7 காணி கைவிடல்கள் இவ் அமைச்சின் கௌரவ அமைச்சரின் பரிந்துரையுடன் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் கௌரவ அமைச்சருக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**05. மாகாண சபை உறுப்பினர்களுக்காக வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.**

வட மாகாணத்தின் முதலமைச்சருக்கு வரி அறவீடு இன்றி வாகன அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்காக 01ஃ2017 சுற்றறிக்கையினை மறுசீரமைக்க அமைச்சரவைக் குறிப்பும் வட மாகாணத்தின் மாகாண சபை உறுப்பினர்களுக்கு வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக 01/2017 சுற்றறிக்கையினை மறுசீரமைப்பதற்கும் அமைச்சரவைக் குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**06. சேவைப் பிரமாணக் குறிப்பினைத் தயாரித்தல் மற்றும் மாகாண அரச சேவைக்கான ஆட்சேர்ப்பு ஒப்பளவுகள்**

இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் (சிவில்/ மின்/ இயந்திர) இற்காக தனியான சேவையினை தாபிக்க பொது நிருவாக முகாமைத்துவம் சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சினால் இவ் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பு வரைவு மாகாணங்களின் மேற்பார்வை மற்றும் பரிந்துரையினைப் பெற்றுக் கொள்வதற்காக சகல மாகாண பிரதம செயலாளர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தெற்கு, சப்ரகமுவ, வடக்கு மாகாணங்களின் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களின் பரிந்துரையினை பின்னர் வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**07. உள்ளூராட்சி மன்ற முகாமைத்துவ சேவை பதவிகளைத் தாபித்தல்.**

உள்ளூராட்சி மன்ற முகாமைத்துவ சேவை பதவிகளை ஏற்படுத்துவது தொடர்பில் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் எதிர்கால செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக சகல மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் அரச நிருவாக முகாமைத்துவம் உட்பட சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சினை அறிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**08. 03/2014 சுற்றறிக்கைக்கமைய மாகாண அரச சேவையில் புதிய பதவிகளை ஏற்படுத்தல்.**

மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்காக புதிய பதவிகளை ஏற்படுத்துவதற்கு முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை 03/2014 இற்கமைய கிடைக்கப் பெற்றுள்ள 467 கோரிக்கைகள் பரிந்துரை செய்து முகாமைத்துவ சேவைத்திணைக்களத்திற்கு எதிர்வரும் செயற்பாடுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**09. மாகாண சபைத் தேவைகளுக்கமைய அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல்**

மாகாண சபைகளுக்குரிய பிரச்சினைகள் தொடர்பில் 06 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தயாரிக்கப்பட்டு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**10. மறுசீரமைக்கப்பட்ட பொது நிருவாக சுற்றறிக்கை 22/99 இன் கீழ் மாகாண சபைகளின் ஓய்வூதிய உத்தியோகத்தர்களுக்கு வாகன அனுமதிப் பத்திரங்களை வெளியிடல்.**

கிடைக்கப்பெற்ற 83 அனுமதிப்பத்திரங்களை பரிந்துரை செய்து வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**11. அரசியல் காரணங்களுக்கமைய பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்கொண்டோருக்கு நிவாரணம் வழங்குதல்.**

2017.03.27 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய 168 உத்தியோகத்தர்களின் மேன்முறையீடு தொடர்பான தகவல்கள் இவ் அமைச்சிற்கு கிடைக்கப் பெற்றுள்ளதுடன் அதில் 115 பேர்களின் தகவல்கள் தேவையான செயற்பாடுகளுக்காக உரிய மாகாண பிரதம செயலாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதில் 57 பேர்களின் முன்னேற்றங்கள் இவ் அமைச்சிற்கு அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் பரிந்துரைகளை அமுல்படுத்துவது தொடர்பில் பின்னூட்டல் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகினறன.

**12. மாகாண சபைகளில் பதவி வகிப்போரின் வரப்பிரசாதங்கள், கொடுப்பனவுகள் மற்றும் வசதிகள்**

மாகாண சபைகளில் பதவி வகிப்போரின் வரப்பிரசாதங்கள் தொடர்பில் பொது முறையினை உருவாக்குவதற்காக இவ் அமைச்சினால் சுற்றறிக்கை வரைவு தயாரிக்கப்பட்டு அது அங்கீகாரத்திற்காக 2018.01.05 ஆம் திகதி கௌரவ அமைச்சரினால் கையொப்பம் இட்டு அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இவ் அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக 2018.01.30 ஆம் திகதி எட்டப்பட்ட தீர்மானங்களுக்கமைய அமைச்சரவை மறுசீரமைப்புடன் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் அவ் அங்கீகாரத்தை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட வரைவு சுற்றறிக்கை 2018.02.08 ஆம் திகதி ஜனாதிபதி செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**13. பொதுமக்கள் மனு செயற்குழு**

இரண்டு மனுக்கள் தேவையான செயற்பாடுகளுக்காக உரிய மாகாண சபைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் பொதுமனு செயற்குழுவினால் அனுப்பப்பட்டுள்ள பொது மனுக்களுக்குரியதான ஒரு அறிக்கை தொடர்பில் இவ் அமைச்சின் பரிந்துரை பொதுமனு செயற்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**14. பாராளுமன்றக் கேள்வி**

பாராளுமன்றத்தில் 38 கேள்விகளுக்காக மாகாண முதலமைச்சர்களின் தகவல்களை பெற்றுக் கொண்டு பதில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**15. ஜனாதிபதி செயலகத்தின் விசேட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்**

I. தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழ் மத்திய மாகாண பிரதம செயலாளருக்கு ரூபா 1,264,989.00 நிதி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

II. துரித உணவு உற்பத்தி தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் மத்திய மாகாணத்திற்காக ரூபா 1,358,700.00 உம், தென் மாகாணத்திற்காக ரூபா 375,000.00 உம், சப்ரகமுவ மாகாணத்திற்காக ரூபா 418,000.00 உம், கிழக்கு மாகாணத்திற்காக ரூபா 1,778,291.60 உம், வடக்கு மாகாணத்திற்காக ரூபா 1,050,000.00 என்ற அடிப்படையில் மாகாண பிரதம செயலாளர்களுக்கு நிதிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன.

III. நிலையான பாடசாலை சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் வட மாகாண பிரதம செயலாளருக்கு ரூபா 5,031,923.52 நிதி செலுத்தப்பட்டுள்ளது.

IV. சிறார்களை காப்போம் என்ற தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் மேல் மாகாணத்திற்காக ரூபா 432,000.00 உம், தென் மாகாணத்திற்காக ரூபா 2,290,890.42 உம், மத்திய மாகாணத்திற்காக ரூபா 793,622.70 என்ற அடிப்படையில் மாகாண பிரதம செயலாளர்களுக்கு நிதி செலுத்தப்பட்டுள்ளது.

V. பண்டுகஸ்நுவர இலக்கம் 8 நீர்ப்பாசன அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் வடமேல் மாகாண பிரதம செயலாளருக்கு ரூபா 11,314,519.03 நிதி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

VI. சுற்றாடல் பாதுகாப்பு தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் ஊவா மாகாண பிரதம செயலாளருக்கு ரூபா 154,925.00 நிதி செலுத்தப்பட்டுள்ளது.

VII. வடமேல் மாகாண அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் வடமேல் மாகாண பிரதம செயலாளருக்கு ரூபா 19,569,243.46 நிதி செலுத்தப்பட்டுள்ளது.

16. உள்நாட்டு விவகார அமைச்சின் விசேட வேலைத்திட்டத்திற்கமைய புத்தெழுச்சி பெறும் பொலன்னறுவை வேலைத்திட்டத்தின் கீழ் வடமத்திய மாகாண பிரதம செயலாளருக்கு ரூபா 173,495,311.43 நிதி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# 3.6. சட்டப் பிரிவு

1. மாகாண சபை, நகர சபை மற்றும் பிரதேச சபை கட்டளைச் சட்டத்தை மறுசீரமைக்கும் யோசனைகளை சமர்ப்பிப்பதற்காக குழுவினை நியமித்து அக்குழு மூலம் சட்டத்தை மறுசீரமைப்பதற்குரியதாக வகுக்கப்பட்ட யோசனை அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கமைய சட்ட வரைஞருக்காக சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது. சட்ட வரைஞரினால் வகுக்கப்பட்ட இறுதி வரைவு சட்டமா அதிபர் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2. உள்ளூராட்சி மன்ற நிறுவன வாக்கெடுப்பு கட்டளை சட்ட மறுசீரமைப்பின் சகல விடயங்களையும் பரிசீலனை செய்து வசதிக்காக ஒரு சட்டமாக தயாரிக்கப்பட்டுள்ளது. அது எதிர்வரும் காலங்களில் அமைச்சின் இணையத்தளத்தில் உள்ளடக்கப் படவுள்ளது.

3. 2017 இலக்கம் 17 கொண்ட மாகாண சபை வாக்கெடுப்பு மறுசீரமைப்புச் சட்டத்தின் தொழில்நுட்ப கோளாறுகளை திருத்தியமைக்கும் யோசனையினை வகுக்கும் பணிகள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. சட்ட வரைபிற்காக ஆலோசனைகளை வழங்குவதற்கு அது அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

4. தோட்டத் தொழிலாளர்களுக்கு நலன்புரி வசதிகளை வழங்குவதற்காக ஒதுக்கீடுகளை வழங்கக்கூடிய வகையில் பிரதேச சபைச் சட்டத்தை மறுசீரமைக்கும் வகையில் வகுக்கப்பட்ட சட்ட வரைவு பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

5. உள்ளூராட்சி மன்ற நிறுவன இடைக்கால பிரமாணக் குறிப்பினைத் தயாரிப்பது தொடர்பான வழிகாட்டல் ஆலோசனைக் கோவை மற்றும் மாகாண சபைக் கொள்கை பிரகடனத்தை வகுத்து ஆலோசனைக் கோவை அச்சிட்டு பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

6. அத்தியாவசிய விடயங்களுக்குரியதாக மாகாண சபைகளுக்காக மாதிரிக் கொள்கைப் பிரகடனத்தை வகுக்கும் வேலைத்திட்டம்

7. முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கு நேரடியாக வழங்குவது தொடர்பில் சட்ட வரைபினைப் தயாரித்து சட்டமா அதிபரின் சான்றிழைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# 3.7. நிர்வாகப் பிரிவு

**நோக்கம்**

அமைச்சின் மானிட வள முகாமைத்துவம், மானிட வள அபிவிருத்தி மற்றும் பௌதீக வள முகாமைத்துவம் நிர்வாகப் பிரிவின் பிரதான பணிகளாகும். கீழ்க் குறிப்பிட்ட செயற்பாடுகள் மூலம் அப்பணிகள் 2018 ஆம் ஆண்டு பூராகவும் திருப்திகரமான மட்டத்தை எட்டியுள்ளன.

| | பணிகள் | மேற்கொள்ளப்பட்ட அடிப்படைச் செயற்பாடுகள் |
|---|---|---|
| 01. | மானிட வள முகாமைத்துவம் | தனிப்பட்ட கோவைகளைப் பேணல் |
| | | விடுமுறை ஆவணங்களைப் பேணல் |
| | | நாளாந்த தபால் தொடர்பான சகல பணிகளையும் மேற்கொள்ளல் |
| | | உள்ளக மற்றும் வெளி இடமாற்றங்களை அமுல்படுத்தல் |
| | | உத்தியோகத்தர்களை ஓய்வுறுத்தும் பணிகள் |
| | | தேவையற்ற பதவிகளை நீக்குதல் மற்றும் புதிய பதவிகளை உருவாக்குதல் |
| | | அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் சபையின் வெற்றிடங்களை நிரப்புதல் |
| 02. | பாராளுமன்ற செயற்பாட்டு இணைப்புப் பணிகள் | அமைச்சரவை விஞ்ஞாபனங்களை அமைச்சரவைக்கு சமர்ப்பித்தல் |
| | | இவ் அமைச்சிற்குரிய பாராளுமன்ற 68 கேள்விகளுக்காகப் பதிலளித்தல் |
| | | அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்காக கௌரவ அமைச்சரின் மேற்பார்வையினை வழங்குதல். |
| 03. | தகவல்களை அறிந்து கொள்ளும் சட்டத்தை அமுல்படுத்தல் | சட்டம் தொடர்பில் அறிவுறுத்தும் வேலைத்திட்டங்களை நடாத்துதல் |
| | | அவ்வவ் பிரிவுகள் மூலம் வெளியிடப்பட்ட தகவல்களை சேகரித்தல் |
| | | தகவல்களை பெற்றுக் கொள்ளக்கூடிய செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள் தொடர்பில் அமைச்சின் இணையத்தளத்தை வெளியிடல் |
| 04. | நாளாந்த தபாலை நடாத்திச் செல்லல் | பொதுத் தபால், பதிவுத் தபால், கடுகதி தபால் நேரடியாகக் கொண்டு வந்து கையளித்தல் உட்பட தபால் தொடர்பாக சகல கடமைப் பணிகளையும் மேற்கொள்ளல். |
| 05. | உற்பத்தித் திறன் செயற்பாடுகளை அமுல்படுத்தல் | "உற்பத்தித் திறன்"அமுல்படுத்தும் திட்டத்தை வகுத்தல் |
| | | 5S சிந்தனை அமுல்படுத்தப்பட்ட விருது பெற்ற நிறுவனங்களின் மேற்பார்வை சுற்றுலாவிற்காக அமைச்சு உத்தியோகத்தர்களை பங்கேற்கச் செய்தல் |
| | | 5S எண்ணக்கருவை அவ்வவ் பிரிவுகள் மூலம் அமுல்படுத்தல் |
| | | தேசிய உணவுப் புரட்சியின் கீழ் அமைச்சு வளாகத்தில் விவசாய செய்கை செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் பசுமையான வளாகமாக மாற்றியமைத்தல் |

| | | |
|---|---|---|
| | | தேசிய உணவுப் புரட்சியின் கீழ் அமைச்சு வளாகத்தில் விவசாய செய்கை செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் பசுமையான வளாகமாக மாற்றியமைத்தல் |
| | | அமைச்சு வளாகத்தை அலங்கரிப்பதற்காக அலங்கார மலர் சாடிகளைத் தாபித்தல் |
| 06. | பௌதீக வள முகாமைத்துவம் | 01. இராஜாங்க அமைச்சர் அலுவலகம், அமைச்சின் உத்தியோகத்தர்களின் அலுவலக சுற்றுப்புறம் ஆகியவற்றினை புதுப்பித்தல் மற்றும் அமைச்சின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.<br>02. வெளிச் சேவைகளை வழங்கிகின்ற நிறுவனங்களுடன் தொடர்புபட்டு அத்தியாவசியமான சேவைகளை கொண்டு செல்லல் |

## உற்பத்தித்திறன் வேலைத்திட்டத்தில் ஏற்பட்டுள்ள சாதகமான மாற்றங்கள்

மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றப் பிரிவை அரச துறையின் சேவைகளை வழங்கும் பயன்மிக்க நிறுவனமாக மாற்றியமைக்கும் நோக்குடன் புதிய தொழில்நுட்ப முறைகள் ஊடாக அதிசிறந்த தளமாக மாற்றியமைப்பதற்கு பயன்மிக்க வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு தேசிய உற்பத்தித்திறன் செயலக அலுவலகத்துடன் 2017 ஆம் ஆண்டில் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய ஏற்கனவே தேசிய உற்பத்தித்திறன் செயலக அலுவலகத்தின் அனுசரனையுடன் உற்பத்தித்திறன் தொடர்பான விரிவுரை மற்றும் செயலமர்வு நடாத்தப்பட்டுள்ளது, இதன் மூலம் உற்பத்தித்திறன் தொடர்பிலான விளக்கம் மற்றும் அதன் மூலம் கிடைக்கப் பெற்றுள்ள பயன்பாடுகள் தொடர்பில் உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்படுகின்றமையினால் உற்பத்தித் திறன் தொடர்பில் நேர்மனப்பாங்கு சிந்தனை மற்றும் உற்பத்தித் திறன் மிக்க அடைவு மட்டங்கள் உத்தியோகத்தர் மத்தியில் விருத்தியடைந்துள்ளது.

ஐம்பெரும் எண்ணக்கருக்களை அமுல்படுத்துவதன் மூலம் ஒழுங்கான சூழல் உருவாகுவதை போன்று அதன்மூலம் விருப்பத்திற்குரிய பணிச் சூழலை முன்னெடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆர்வத்தை ஏற்படத்தக்ககூடிய சாதக மாற்றங்கள் ஏற்கனவே இடம்பெறுகின்றன.

அத்துடன் பயன்மிக்க வேலைத்திட்டங்கள் மூலம் வெற்றியைப் பெற்று நிறுவனங்களின் துறைசார் சுற்றுலா ஊடாக மேற்கொள்ளும் மேற்பார்வைகள் மூலம் புதிய கருத்துக்கள் மற்றும் ஆக்கத்திறன்மிக்க பிரவேசத்திற்கு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதன் மூலம் பயன்மிக்க ஆக்கங்கள் ஊடாக புதிய செயற்திட்டங்களை இனங்கண்டு அமுல்படுத்துவதும் உற்பத்திறன் மிக்க பிரவேசத்தைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்காக நடவடிக்கை எடுப்பதும் அதற்குரியதான எதிர்காலத் திட்டமாக குறிப்பிட முடியும்.

# 3.8. நிதி பிரிவு

## பணிக்கூற்று

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நோக்கம் உட்பட பணிக்கூற்றினை எட்டுவதற்காகத் தேவையான நிதிப் பங்களிப்பினை வழங்குதல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியைப் பயன்மிக்கதாக பயன்படுத்தி பொதுமக்களின் நிதி தொடர்பில் நெகிழ்வுத் தன்மையுடன் செயற்படல்.

## செயற்பாட்டுப் பணிகள்

**01. நிதி வள முகாமைத்துவம்**

அமைச்சின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை எட்டுவதனை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்திற்கமைய தேவையான நிதி மதிப்பீடுகளைத் தயாரித்து பொதுத் திறைசேரிக்கு சமர்ப்பித்து நிதியினை ஒதுக்குதல். அந்நிதி அவ்வவ் பணிகளுக்காக உரியவாறு பயன்படுத்தப்பட்டாத என்பதை உறுதிப்படுத்தி தாமதமின்றி கொடுப்பனவுச் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

**02. பௌதீக வள முகாமைத்துவம்**

பெறுகைத் திட்டங்களுக்கமைய பொருட்கள் மற்றும் சேவைகள் உரிய ஒதுக்கீட்டுச் செயற்பாடுகளைப் பின்பற்றி தேவைக்கு ஏற்றவாறு வழங்குதல், அவற்றைப் பராமரித்தல், கணக்குகளில் பதிதல் மற்றும் உரிய சொத்து ஆவணத்தைப் பேணுதல் உட்பட வருடாந்தப் பொருள் ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதன் மூலம் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தல்.

**03. கணக்குக் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள்**

சகல கொடுக்கல் வாங்கல்களுக்குரிய கணக்கறிக்கை புத்தகங்கள் மற்றும் ஆவணங்களைப் பேணுதல் உட்பட மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த அறிக்கைகளை உரிய நிறுவனங்களுக்கு உரியவாறு உரிய தினங்களில் வழங்குதல் மற்றும் உயரிய முகாமைத்துவத்திற்குத் தேவையான சமகாலத் தகவல்களை வழங்குவதன் மூலம் தீர்மானம் எடுக்கும் செயற்பாடுகளுக்கு உதவுதல்.

**04. இறுதிக் கணக்குகளைச் சமர்ப்பித்தல்.**

பாராளுமன்றத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி செலவிடப்பட்ட முறைகள் தொடர்பில் இறுதிக் கணக்கு அதாவது வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கினை உரிய தினத்திற்கு முன்கொண்டு செல்வதற்கு சமர்ப்பிப்பதன் மூலம் நிதி தொடர்பிலான பொறுப்புக்கள் உட்பட கடமைகள் குறித்த விடயங்களை உறுதிப்படுத்தல்.

## எட்டப்பட்ட இலக்ககள்

01. ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதி உட்பட வெளிநாட்டுச் செயற்திட்டங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியை ஒதுக்கப்பட்ட பணிகளுக்காக பயன்படுத்தியும் அவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதி மிகையாக இருப்பின் வேறு தேவையான பணிகளுக்காக மாற்றுவதன் மூலம் சகல நிதியையும் சிக்கனமாக செலவிடுவது தொடர்பில் கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்க வேண்டிய இறுதிக்கணக்கு (ஒதுக்கீட்டுக் கணக்கு) உரிய தினத்திற்கு சமர்ப்பிக்கப்படல்.

02. அமைச்சின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிவர்த்தி செய்யும் வகையில் தேவையான இயந்திர உபகணரங்களைத் தாமதமின்றி வழங்குதல் மற்றும் அமைச்சின் சொத்துக்களை உரிவாறு முகாமைத்துவத்திற்குட்படுத்தல்.

03. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் செயற்திட்டங்களில் கணக்கு அறிக்கைகள், மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் பொதுத் திறைசேரிக்கு உரிய நேரத்திற்கு சமர்ப்பித்து உரிய நேரத்திற்கு நிதி பெற்றுக்கொள்ளல்.

04. முற்பண ட கணக்கின் கீழ் ஒதுக்கப்படும் ஒதுக்கீடுகள் ஊடாக அரச உத்தியோகத்தர்களுக்கு தாமதமின்றி தேவையான கடன் நிதியினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

05. அமைச்சிற்குத் தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதை போன்று உள்ளூராட்சி மன்ற அதிகாரப் பிரதேசங்களில் அபிவிருத்திக்குள் உட்பட உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக தேவையான இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்யும் போது அதற்கான பெறுகைச் செயற்பாடுகளை நெகிழ்வுத் தன்மையுடன் மற்றும் வினைத்திறனுடன் முன்னெடுத்தல்.

06. கணக்காய்வாளரின் கணக்காய்வுகளுக்கு மற்றும் உள்ளக ரீதியில் எழுந்த கணக்காய்வுகளுக்கு தாமதமின்றி பதிலழித்தல் மற்றும் வெளிப்படுத்தப்படும் குறைபாடுகளைத் திருத்தியமைப்பதற்குத் தாமதமின்றி செயற்படல் மற்றும் அரச கணக்குச் செயற்குழு சந்தர்ப்பத்திற்குத் தேவையான வேளைகளில் ஆஜர்ஆகுதல்.

07. உள்ளூராட்சி மன்ற நிறுவன அதிகாரப் பிரதேசங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ள பல்வேறுபட்ட அபிவிருத்தி மற்றும் சேவைகளுக்காக தாமதமின்றி நிதி விடுவித்தல்.

## 2018 ஆம் இடம்பெற்ற பெறுகை நடவடிக்கைகள்

1 வெள்ளவத்தை இறைக்கும் நிலையத்தின் புணர்நிர்மாணத்துடன் கூடிய இரண்டாம் நிலைக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம்

2 125 கிமீ நீளமான சாக்கடைகளின் சுத்திகரிப்பு, CCTV மதிப்பீடுகள் மற்றும் ஆதங்களின் தகவல் திரட்டினைத் தயாரித்தல்

3 15.61 கி.மீ. நீளமான கொழும்பின் தெற்காக காணப்படுகின்ற சாக்கடை வலையமைப்பினை புனர்நிர்மாணம், பிரதியீடு, பழுதுபார்த்தல் மற்றும் சுத்திகரிப்புச் செய்தல், உடைவுகள், தடைகள், படிதல் பிரச்சினைகள், கொள்ளளவு பிரச்சினைகள் மற்றும் மறுசீரமைப்புத் தேவைப்பாடுகள்

4 கொழும்பின் தெற்காகக் ஒதுக்கீடு செய்யப்படாது காணப்படுகின்ற ஏனைய 02 பகுதிகளுக்கான மூன்று இறைக்கும் நிலையங்களினதும் மற்றும் 6.22 கி.மீ. நீளமான சாக்கடை வலையமைப்பு ஆகியவற்றின் நிர்மாணம்

5 இலங்கையில் தற்போது காணப்படுகின்ற பாரம்பரிய தெரு விளக்குகளுக்குகளுக்குப் பதிலாக சிறந்த வினைத்திறனுடைய எல்.ஈ.டீ. தெரு விளக்குகளைப் பொருத்தும் கருத்திட்டம்

6 நெதர்லாந்து அரசாங்கத்தின் நிதிச் சலுகை அடிப்படையில் கிராமியப் பாலங்களை நிர்மாணித்தல்

7. வளர்ச்சி பெறும் பிராந்தியங்களின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டத்தின் (RIDEP) கீழ் கிராமிய மக்களுக்கான குடிநீர் வழங்கல் முன்மொழிவுத் திட்டங்களை மேம்படுத்துவதற்கான ஆலோசனை ஒப்பந்தப் பெறுகை

8 வளர்ச்சி பெறும் பிராந்தியங்களின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டத்தின் (RIDEP) கீழ் கிராமியப் பாதைகளுக்கான ஆலோசனை ஒப்பந்தப் பெறுகை

9 ஒஸ்ட்றியாவின் இலகு கடன் அடிப்படையில் கொழும்பு மாநகர சபைக்கு (CMC) 3 ஏ தரத்திலான தீயணைப்பு நிலையங்களை வழங்குதல்

10 கிராமியப் பாலங்களை நிர்மாணித்தல் - ஒஸ்ட்ரியா

11 கிராமியப் பாலங்களை நிர்மாணித்தல் - பெல்ஜியம்

12 கிராமியப் பாலங்களை நிர்மாணித்தல் - ஹங்கேரியா

13 கிராமியப் பாலங்களை நிர்மாணித்தல் – ஐக்கிய இராச்சியம்

14 இரண்டாம் நிலை நகரங்களை நிலையாக அபிவிருத்தி செய்யும் கருத்திட்டம்

15 கழிவுகளை ஒன்று சேர்க்கும் உபகரணம் (கொரியா எக்சிம் வங்கி) (கடன் இல SRI 29, SRI 30)

16 புறநெகும கருத்திட்டத்தின் கீழ் உள்ள நீர் விநியோகத்திட்டம் பதலயாய, பெலகங்வெல ஆகிய பகுதிகளில் விநியோகம் மற்றும் விநியோக வலையமைப்பினை பதித்தல்

17 புறநெகும கருத்திட்டத்தின் கீழ் உள்ள நீர் விநியோகத்திட்டம் கிராந்துருகோட்டை நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் சிவில் வேலைகள் ஆகியவற்றை உள்வாங்குதல்

18 புறநெகும கருத்திட்டத்தின் கீழ் உள்ள நீர் விநியோகத்திட்டம் கிராந்துரு கோட்டை நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் பொறியியல் மற்றும் மின்சார வேலைகள் ஆகியவற்றை உள்வாங்குதல்


19 புறநெகும கருத்திட்டத்தின் கீழ் தம்புள்ளை கிராமப்புறங்கள் மற்றும் கண்டலம ஆகிய பகுதிகளுக்கு நீர் வழங்கலை நீடித்தல்


20 புறநெகும கருத்திட்டத்தின் கீழ் இனாமலுவ மற்றும் கித்துல் ஹெட்டியாவ ஆகிய பகுதிகளுக்கு நீர் வழங்கலை நீடித்தல்

21 புறநெகும கருத்திட்டத்தின் கீழ் சீகிரியா மற்றும் ஹபறன ஆகிய பகுதிகளுக்கு நீர் வழங்கலை நீடித்தல்

22 புறநெகும கருத்திட்டத்தின் கீழ் கலேவெல மற்றும் தித்தவல்கொல்ல ஆகிய பகுதிகளுக்கு நீர் வழங்கலை நீடித்தல்

23 கடன் மற்றும் நன்கொடை நியதிகளின் அடிப்படையில் ஜப்பான் சாய்னெட் நிறுவனத்தின் மூலமாக தீயணைப்பு இயந்திரங்கள், அம்பியுலன்ஸ் வண்டிகள், தீயணைப்பு உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்களின் பெறுகை





| | | |
|---|---|---|
| **மூலதனச் சொத்து புனரமைப்பு** | 20.2 | 14.850061 |
| **மூலதனச் சொத்துக்களைப் பொறுப்பேற்றல்** | 7 | 5.824842 |
| வெளிநாட்டு உதவி பெறும் செயற்றிட்டங்கள் | 11,517.45 | 9,972.88 |
| உள்நாட்டு உதவி பெறும் செயற்றிட்டங்கள் | 4,622.95 | 3,561.84 |
| ஏனைய மூலதனச் செலவினங்கள் | 659.80 | 604.92 |

# 3.9. செலவின ஆய்வுப் பிரிவு

உள்நாட்டு மற்றும் சுதேச விவகார மாகாண சபை உள்ளூராட்சி மன்ற அமைச்சின் நிதி முன்னேற்ற அறிக்கை - 2018

மூலதனச் செலவினம்


| விபரங்கள் | |
|---|---|
| அமைச்சு | A |
| வெளிநாட்டு உதவிச் செயற்திட்டம் | B |



# உள்நாட்டு மற்றும் சுதேச விவகார மாகாண சபை உள்ளூராட்சி மன்ற அமைச்சின் நிதி முன்னேற்ற அறிக்கை - 2018

## மீண்டெழும் செலவினம்

| விபரங்கள் | |
|---|---|
| சம்பளம் கொடுப்பனவு | A |
| ஏனையவை | B |



01. மாகாண சபைகளுக்கு மத்திய அரசாங்கத்தினால் வருடாந்தம் வழங்கப்படுகின்ற நிதியானது அந்நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் விதம் தொடர்பாக தொடர்ச்சியான மதிப்பீடுகளை மேற்கொள்வது ஆய்வுப் பிரிவின் பிரதான செயற்பாடாகும். இச்செயற்பாட்டிற்காக மத்திய அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற வழங்கல்கள், மாகாண சபைகளின் மதிப்பீடுகள், தேறிய வருமானம் மற்றும் செலவினங்கள் தொடர்பான தகவல்கள் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகவல்களை ஆய்வு செய்வதன் ஊடாக ஏற்படுகின்ற வேறுபாடுகள் மற்றும் பிரச்சினைகளை மாகாண நிதி முகாமைத்துவக் கண்காணிப்புக்கு உட்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றதுடன் அதன் மூலமாக தமது நிதி நடவடிக்கைகளின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை எட்டுவதற்கு மாகாண சபைகளை கொண்டுசெல்வதனை நோக்காகக் கொண்டுள்ளது.

02. அதனடிப்படையில் 2018 ஆம் ஆண்டில் மத்திய அரசினால் வழங்கப்பட்ட வழங்கல்கள் மற்றும் மாகாண சபைகளின் வருமானங்கள், மதிப்பீடு செய்யப்பட்ட செலவு எல்லைகள் என்பவற்றின் கீழ் அந்நிறுவனத்தினால் செலவு செய்யப்படும் விதம் தொடர்பாக தொடர்ச்சியான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன், மாகாண சபை நிதிச் செயற்சாதனை தொடர்பாக மாதாந்தம் மற்றும் காலாண்டு அடிப்படையில் அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. இவ்வனைத்துக் காலாண்டு அறிக்கைகளும் மாகாண சபைகள் மற்றும் திறைசேரியிற்கும் குடிசன மதிப்பீட்டுத் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகியவற்றிற்கும் அவர்களின் காலா கால அறிக்கைகளின் பிரசுரிக்கப்படுவதற்கும் மேலும் இத்தகவல்கள் எதிர்பார்க்கப்படும் ஏனைய நிறுவனங்களுக்கும் விநியோகிக்கப்படுகின்றன. இச்செயற்பாடு 2019 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

03. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் ஊழியர் எண்ணிக்கை தொடர்பாக பேணப்பட்டுவருகின்ற தரவுகள் 2018 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாகப் பேணப்பட்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டிலும் இச்செயற்பாட்டினை தொடராகப் பேணுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

04. 2017 ஆம் ஆண்டு தொடர்பான உள்ளூராட்சி மன்றங்களின் வருமானம் மற்றும் செலவினங்கள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய தரவுகள் இவ்வருடத்தில் பேணப்பட்டு வந்துள்ளதுடன், இவற்றைப் பரிசீலனை செய்யப்பட்டதன் பிற்பாடு உள்ளூராட்சி மன்றங்களின் நிதி செயற்சாதனை தொடர்பான அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு அனைத்து உள்ளூராட்சி ஆணையாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி நிறுவனங்களான மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் ஆகியவற்றின் பொது வசதிகள் தொடர்பாக தகவல்களை ஒன்று சேர்த்து அத்தகவல்களை உரிய அறிக்கைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் 2018 ஆம் ஆண்டு தொடர்பான உள்ளூராட்சி மன்றங்களின் நிதி செயற்சாதனை அறிக்கையினைத் தொடர்ந்து தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

05. இவ்வமைச்சின் வழிகாட்டலின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற வெளிநாட்டு உதவிக் கருத்திடங்களின் நிதி செயற்சாதனை மற்றும் அவை தொடர்பான தகவல்களை மாதாந்தம் பெற்றுக் கொண்டு அத்தகவல்களை மாகாண சபை நிதி செயற்சாதனை அறிக்கைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இச்செயற்பாட்டினை 2019 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

06. மாகாண சபைகளின் நிதி நடவடிக்கைகளை ஆய்வு செய்யும் நோக்குடன் கணக்காய்வு வினாக்களுக்கு பதிலளித்தல், வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரித்தல், முற்பணக் கணக்குகள் தயாரித்தல் மற்றும் நிதிக் கணக்குகள் தயாரித்தல் ஆகிய நடவடிக்கைகள் தொடர்பாக விசேடமாக தயாரித்து அனுப்பப்படுகின்ற மாதிரிப் படிவங்களின் ஊடாக 2018 ஆம் ஆண்டில் காலாண்டுகளுக்கான தகவல்கள் மாகாண சபைகளில் இருந்து வரவழைக்கப்பட்டுள்ளன. அத்தகவல்களைப் பயன்படுத்தி உரிய செயற்பாடுகளின் முன்னேற்றத்தினை கேட்டறிவதுடன் அந்நடவடிக்கைகள் தொடர்பாக காணப்படுகின்ற தாமதங்கள் மற்றும் பிரச்சினை நிலைமைகளை மாகாண நிதி முகாமைத்துவத்தின் அவதானத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டிலும் இச்செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளன.

07. அரசாங்க கணக்குக் கோட்பாடுகளுக்கு அமைவாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு புதிய கணக்கீட்டு முறையொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் செயற்படுத்தப்பட்ட வட கிழக்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கான சேவைகளை மேம்படுத்தும் கருத்திட்டம் (NELSIP) மூலமாக மேற்கொள்ளப்பட்டன. இக்கணக்கீட்டு முறைகளைச் செயற்படுத்துவதுடன் தொடர்பாக மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் ஏனைய தரப்பினரைத் தொடர்புபடுத்திக் கொண்டு இப்பிரிவின் மூலமாக மேற்கொள்ளப்பட்டது. தற்போது இக்கணக்கீட்டு முறைகளுக்காக அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதுடன் பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் நடவடிக்கை தற்போது முடிவடைந்துள்ளன. 2019 ஆம் ஆண்டில் இவ்வேலைத்திட்டத்தினைச் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

# 3.10. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

01. முகாமைத்துவக் கணக்காய்வுப் பிரிவு DMA/2009(1) மற்றும் 2009.06.09 ஆம் திகதிய சுற்றறிக்கையில் இணைப்பு 3 இற்கமைய அமைச்சின் அடிப்படை அறிக்கையினை தயாரித்து 2018.01.29 ஆம் திகதி முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

02. முகாமைத்துவக் கணக்காய்வு DMA/2009(1) மற்றும் 2009.06.09 ஆம் திகதிய சுற்றறிக்கையின் 7 வது வாசகத்திற்கமைய இணைப்பு 2 இற்கமைய அமைச்சின் 2018 ஆம் ஆண்டின் கணக்காய்வுத் திட்டங்களை வகுத்து 2018.01.25 ஆம் திகதி முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

03. 2018 ஆம் ஆண்டுக்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவத்தின் 03 குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

04. 2018.09.13 ஆம் திகதிய அமைச்சின் செயலாளரின் தலைமையில் இடம்பெற்ற வாகன நட்டத்தை நீக்கும் குழுவின் நி.ஓ 104 பரிசோதனையில் முடிவுறுத்தப்பட்டுள்ள இரு வாகனங்களின் நட்டத்தை நீக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

05. 2018 ஆம் ஆண்டில் கீழ்க் குறிப்பிட்டவாறு 6 விசேட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

**5.1. அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட விசாரனைகள் விசாரனை மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டம்** **திகதி**

- தேசத்திற்கு மகுடம் 2013 தமன பிரதேச சபையின் சுற்றுலா விடுதி நிர்மானிப்பு 2018.02.16
- அக்கரைப்பற்று நகர அபிவிருத்தியின் கீழ் பொதுச் சந்தை நிர்மானிப்பு - பகுதி III 2018.03.09
- தேசத்திற்கு மகுட அபிவிருத்தி வேலைத்திட்டம் 2013 இன் கீழ் போரைதீவுப்பற்று பிரதேச சபையின் நூலகக் கட்டட நிர்மானிப்பு 2018.02.19
- பண்டுகஸ்நுவர நகர அபிவிருத்தியின் கீழ் கெட்டிபொல நகரில் அங்காடி மற்றும் கால்வாய்த் தொகுதியினை நிர்மானித்தல். 2018.02.16

**5.2. ஏனைய செயற்பாடுகளுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட விசாரனைகள்** **திகதி**

- செயற்கை ஓடுபாதை கட்டடத்தை திறக்கும் வைபவத்திற்காக சுகததாச தேசிய விளையாட்டு கட்டடத் தொகுதி அதிகார சபைக்கு கிடைக்கப்பெற்ற நன்கொடை தொடர்பில் செயற்பட்டு முறைகள் குறித்த அடிப்படை விசாரனைகளை மேற்கொள்ளல். 2018.12.31
- புறநெகும செயற்திட்டத்தின் தென்மாகாண குழுத் தலைவரை நீக்குவது தொடர்பாக விசாரனை மேற்கொள்ளல். 2018.12.31

06. அரச கணக்கு தொடர்பான செயற்குழு சபையினால் 04 கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்ட உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் அடங்கும் மாகாணங்களின் பிரதம செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

07. இலங்கை பாராளுமன்றம், அரச கணக்கு தொடர்பான செயற்குழு சபையின் மேற்பார்வையின் கீழுள்ள நிறுவனங்களின் நிதிச் செயற்சாதனைகள் தொடர்பான மதிப்பீடுகளுக்காக தயாரிக்கப்பட்டு கணணி தகவல் முகாமைத்துவ முறைமை இரண்டாம் கட்டத்தின் கீழ் 2017/2018 ஆண்டுகளில் மதிப்பீடுகளுக்காகப்

பயன்படுத்தப்பட்ட ஒப்பளவுகளை விரிவுபடுத்துவது தொடர்பில் 2018.03.15 ஆம் திகதி பாராளுமன்றத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் பங்கேற்றல் மற்றும் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் மற்றும் மாகாண சபைகளுக்குரிய மதிப்பீட்டு ஒப்பளவுகளை வகுத்து சமர்ப்பித்தல்.

08. களென் விந்துனு வெவ பிரதேச சபையில் மற்றும் திருகோணமலை நகர சபையில் நடாத்தவிருந்த கணக்கு செயற்குழுச் சபை கூட்டத்திற்காக உரிய அறிக்கை கணக்கு செயற்குழு சபையின் செயலாளருக்கு அனுப்புதல்.

09. 2018 ஆம் ஆண்டில் மிகைக் கட்டண செயற்பாடுகள் தொடர்பில் 2018.10.23 ஆம் திகதி VII மிகைக் கட்டண மேன்முறையீட்டுக் கூட்டத்தை நடாத்துதல்.

10. 2018 ஆம் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட 27 கணக்காய்வு பரிசோதனை சமர்ப்பிக்கப்பட்டது

11. அமைச்சு மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான இலங்கை நிறுவகம், உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் உட்பட செயற்திட்டங்களின் கணக்கு ஒப்பீட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

12. அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள்

2016 ஆம் ஆண்டுக்குரியதாக பாராளுமன்ற சபையில் சமர்ப்பிக்கப்பட்ட அரச கணக்குத் தொடர்பான செயற்குழு அறிக்கைகளின் பரிந்துரைகளை அமுல்படுத்தும் போது நிதியாண்டுக்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் உரிய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் பாராளுமன்றத்திற்கு உரிய விடயங்களை அறிக்கைப்படுத்துவதற்காக சகல உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களினதும் முன்னேற்றங்கள் உள்ளடக்கி உரிய அறிக்கையினை மும்மொழிகளிலும் தயாரித்தல்.

# 3.11. உள்ளூராட்சி மன்ற ஆளுகை தொடர்பான இலங்கை நிறுவகம்

## அறிமுகம்

- உள்ளூராட்சி ஆளுகை தொடர்பான இலங்கை நிறுவகம் 1999 இலக்கம் 38 கொண்ட பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டுள்ளது.
- இந் நிறுவனத்தின் செயற்பாட்டு நிருவாகம் மற்றும் முகாமைத்துவத்திற்காக உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் மற்றும் மாகாண சபை அமைச்சின் செயலாளர் உட்பட உத்தியோகபூர்வ அதிகாரத்தின் மூலம் நியமனம் பெறும் 08 அங்கத்தவர்கள் உட்பட அமைச்சின் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்படும் 05 உறுப்பினர்களை உள்ளடக்கிய பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டுள்ளது.
- பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரான பணிப்பாளர் நாயகத்தினால் நிறுவனத்தின் பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## உள்ளூராட்சி ஆளுகை தொடர்பான இலங்கை நிறுவனத்தின் பணிகள்

- மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவின் பங்கேற்புடன் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் தாபன பலத்தினை விருத்தி செய்வதற்காக பயிற்சியளித்தல், ஆலோசனை சேவைகள் மற்றும் ஆராய்ச்சிகளை அமுல்படுத்தல்.
- உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபையின் வினைத்திறனை விருத்தி செய்யும் வகையில் மாகாண முகாமைத்துவ மற்றும் பயிற்சிப் பிரிவினைப் பலப்படுத்தல்.
- மாகாண நிருவாகத்தின் சகல தரப்பினர்களுக்கும் தொழில்நுட்ப மற்றும் தகவல் சேவைகளை வழங்கி தேசிய வள மத்திய நிலையமாக செயற்படல்.
- உரிய தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் இணைப்புக்களை பேணி உள்ளூராட்சி மன்றத்தினை கேந்திர நிலையமாகச் செயற்படுத்தல்.
- மானிட வள விருத்தி, முகாமைத்துவ மற்றும் நிறுவனப் பணிகளை விருத்தி செய்வது தொடர்பில் நிபுனத்துவ சேவைகளை வழங்குதல்.
- உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபை நிறுவனங்களுக்குரியதான புள்ளிவிபரங்கள் உட்பட தகவல்களை சேகரித்தல் மற்றும் அத்தகவல்களை பேணல்.
- தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் உள்ளூராட்சி மன்ற நிருவாகம் தொடர்பிலான நிறுவனங்களுடனான இடைத் தொடர்புகளை கட்டியெழுப்பி மாகாண நிருவாகத்தை போசித்தல்.

இந் நோக்கங்களை எட்டுவதற்காக இந்நிறுவனம் கீழ்க் குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டங்களளை அமுல்படுத்துகின்றது.

தேசிய/ பிரதேச மட்டத்தில் பயிற்சி செயலமர்வு சர்வதேச/ தேசிய மட்டத்தில் கருத்தரங்கு பிரயோக அமர்வு/ இடைநிலை பிரமாணக் குறிப்பினை தயாரித்தல்/ உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் இறுதிக் கணக்கைத் தயாரித்தல்.

## டிப்ளோமா பாடநெறி

உள்ளூராட்சி மன்றம் தொடர்பான உயர் டிப்ளோமா பாடநெறி/ உள்ளூராட்சி மன்ற டிப்ளோமா பாடநெறி/ நிதி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி/ உள்ளூராட்சி மன்ற பொறியியல் டிப்ளோமா/ சமூக அபிவிருத்தி தொடர்பான டிப்ளோமாப் பாடநெறி

## சான்றிதழ் பத்திரப் பாடநெறி

உள்ளூராட்சி மன்ற சட்டம் தொடர்பான சான்றிதழ் பத்திரப் பாடநெறி/ கணணி சான்றிதழ் பத்திரப் பாடநெறி/ ஆராய்ச்சி முறைகள் தொடர்பான சான்றிதழ்ப் பத்திர பாடநெறி/ அரசியல் பிரவேசம் தொடர்பான சான்றிதழ் பத்திரப் பாடநெறி

*ஆராய்ச்சி/ ஆலோசனை சேவை வழங்கல்/ கையேடு, துண்டுப் பிரசுரங்களை வெளியிடல்/ உள்ளூராட்சி ஆளுகை தொடர்பான இலங்கை நிறுவகத்தின் மூலம் 03 மாத உள்ளூராட்சி மன்ற சஞ்சிகையினை உள்ளடக்கிய பத்திரிகையினை வெளியிடல் உள்ளூராட்சி மன்ற பத்திரிகை (சிங்களம் மற்றும் தமிழ் மொழி) மூலம் வெளியிடப்படுகின்றது. அதேபோன்று உள்ளூராட்சி மன்றம் தொடர்பான வருடாந்த சஞ்சிகையும் பிரசுரிக்கப்படும்.*

மேற்கூறப்பட்ட பணிகளை அமுல்படுத்துவதற்காக உள்ளூராட்சி ஆளுகை தொடர்பான இலங்கை நிறுவகம் கீழ்க் குறிப்பிடப்பட்ட பிரிவுகளை கொண்டமைந்துள்ளன.

- பொறியியல் பிரிவு
- பொது முகாமைத்துவ மற்றும் மானிட வள அபிவிருத்திப் பிரிவு
- நிதி முகாமைத்துவப் பிரிவு
- பௌதீக திட்டமிடல் பிரிவு
- சட்டப் பிரிவு
- ஆராய்ச்சிப் பிரிவு
- கணணி பிரிவு
- பயிற்சிப் பிரிவு
- தாபன கொள்ளளவு அபிவிருத்திப் பிரிவு

## 2018 ஆம் ஆண்டு மானிட அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்கள்

## பொறியியல் பிரிவு

| இலக்கம் | செயலமர்வின் பெயர் | எதிர்பார்க்கப்பட்ட செயலமர்வு எணணிக்கை | நடாத்தப்பட்ட மொத்த எண்ணிக்கை | பங்கேற்ற பயிற்சியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| **01** | உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் தொழில் நுட்ப உத்தியோகத்தர்களுக்காக அறிவுறுத்தல் மற்றும் திறமை வேலைத்திட்டம் (அலுமினியம், குழாய் நீர் பொருத்துதல் மற்றும் தொழில்நுட்ப பாடங்களுக்கு) | **09** | **09** | **400** |
| 02 | உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்காக வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை வினைத்திறனுடன் பராமரிப்பதன் மூலம் பராமரிப்புச் செலவினத்தை குறைத்தல். | **09** | **09** | **420** |
| 03 | உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்காக வீதி நிர்மானிப்பு மற்றும் பங்கசு பரிசோதனைகளை மேற்கொள்வது தொடர்பில் பரிசோதனைகளுக்கான அறிவு மற்றும் தேர்ச்சியினை விருத்தி செய்யும் வேலைத்திட்டம் | **09** | **09** | **450** |

## பொது முகாமைத்துவ மற்றும் மானிட வள அபிவிருத்திப் பிரிவு

| இலக்கம் | செயலமர்வின் பெயர் | எதிர்பார்க்கப்பட்ட செயலமர்வு எணணிக்கை | நடாத்தப்பட்ட மொத்த எண்ணிக்கை | பங்கேற்ற பயிற்சியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | ஒழுக்காற்று கொள்கைகள் தொடர்பான செயலமர்வு குறித்த பயிற்சி | **09** | **06** | **325** |
| 02 | சுய விபரக் கோவைகளை தயாரிப்பது தொடர்பான செயலமர்வு | **09** | **08** | **336** |
| 03 | மகிழ்ச்சியுடன் பணியாற்றுவது தொடர்பான செயலமர்வு | **09** | **05** | **265** |

## பௌதீக திட்டமிடல் பிரிவு

| இலக்கம் | செயலமர்வின் பெயர் | எதிர்பார்க்கப்பட்ட செயலமர்வு எணணிக்கை | நடாத்தப்பட்ட மொத்த எண்ணிக்கை | பங்கேற்ற பயிற்சியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் உரிய உத்தியோகத்தர்களுக்காக நில அங்காரம் தொடர்பான செயலமர்வு | **09** | **09** | **427** |
| 02 | உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் உரிய உத்தியோகத்தர்களுக்காக அனர்த்த முகாமைத்தவம் தொடர்பான பயிற்சி செயலமர்வு | **04** | **04** | **240** |
| 03 | உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் உரிய உத்தியோகத்தர்களுக்காக செயற்திட்ட முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி செயலமர்வு | **05** | **05** | **194** |
| 04 | உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் உரிய உத்தியோகத்தர்களுக்கான சுயாதீன அபிவிருத்தி தொடர்பான பயிற்சி செயலமர்வு | **03** | **03** | **113** |
| 05 | உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் உரிய உத்தியோகத்தர்களுக்கான சொத்து மதிப்பீடு தொடர்பான பயிற்சி செயலமர்வு | **06** | **06** | **518** |

## சட்டப் பிரிவு

| இலக்கம் | செயலமர்வின் பெயர் | எதிர்பார்க்கப்பட்ட செயலமர்வு எணணிக்கை | நடாத்தப்பட்ட மொத்த எண்ணிக்கை | பங்கேற்ற பயிற்சியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் உரிய உத்தியோகத்தர்களுக்கான உடன்படிக்கை முறை ஒழுங்குவிதிகள் மற்றும் அறிவுறுத்தல் வேலைத்திட்டம் தொடர்பான பயிற்சி செயலமர்வு | **09** | **09** | **414** |

| | | | | |
|---|---|---|---|---|
| **02** | உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் உரிய உத்தியோகத்தர்களுக்காக இடைக்கால பிரமாணக் குறிப்பினை வகுத்தல் மற்றும் அமுல்படுத்தல் தொடர்பான பயிற்சி செயலமர்வு | **09** | **09** | **395** |
| **03** | உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் உரிய உத்தியோகத்தர்களுக்காக உள்ளூராட்சி மன்ற சட்டம் தொடர்பிலான பயிற்சி செயலமர்வு | **09** | **09** | **478** |
| **04** | உள்ளூராட்சி மன்ற சட்டம் தொடர்பான சான்றிதழ் பத்திர பாடநெறி | **01** | **01** | **30** |

## ஆராய்ச்சி பிரிவு

| இலக்கம் | செயலமர்வின் பெயர் | எதிர்பார்கப்பட்ட வேலைத்திட்ட எண்ணிக்கை | முன்னேற்றங்கள் |
|---|---|---|---|
| **01** | உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் வருமானத்தை சேகரிப்பதன் வினைத்திறன் தொடர்பான ஆராய்ச்சி கற்கை | **01** | வரைவு அறிக்கை ஆய்விற்குட்படுத்தப் படுகின்றது. |
| **02** | மாகாண சபைகளினால் திட்டமிட்ட அமுல்படுத்துவது தொடர்பில் செயற்பட்டுள்ள முறைகள் குறித்த கற்கை | **01** | வரைவு அறிக்கை ஆய்விற்குட்படுத்தப் படுகின்றது. |
| **03** | மாதிரி உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் தொடர்பான செயலமர்வு | **01** | வேலைத்திட்டங்கள் வெற்றிகரமாக முடிவுறுத்தப் பட்டுள்ளன. |
| **03** | உள்ளூராட்சி மன்ற சஞ்சிகை (சிங்களம்) | **01** | அச்சிடும் கட்டத்தில் உள்ளது |
| **04** | ஆராய்ச்சி முறைகள் தொடர்பான சான்றிதழ் பத்திர பாடநெறி | **01** | வேலைத்திட்டங்கள் வெற்றிகரமாக முடிவுறுத்தப் பட்டுள்ளன. |

## நிதி முகாமைத்துவப் பிரிவு

| இலக் கம் | செயலமர்வின் பெயர் | எதிர்பார்க்கப்பட்ட செயலமர்வு எணணிக்கை | நடாத்தப்பட்ட மொத்த எண்ணிக்கை | பங்கேற்ற பயிற்சியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| **01** | அரச பிரிவின் கணக்கு தரத்திற்கமைய உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் நிதி வெளியீடுகளை தயாரித்தல் மற்றும் பிரயோகப் பயிற்சி செயலமர்வு | **09** | **15** (UNDP நிறுவனத்தின் நிதி அனுசரனைக் கமைய இவ் வேலைத் திட்டம் நடாத்தப்பட்டது. | **750** |
| **02** | உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்காக வரவு செலவுத்திட்டம் தொடர்பான செயலமர்வு | **09** | **09** | **380** |

## கணணி பிரிவு

| இலக்கம் | செயலமர்வின் பெயர் | எதிர்பார்க்கப்பட்ட செயலமர்வு எணணிக்கை | நடாத்தப்பட்ட மொத்த எண்ணிக்கை | பங்கேற்ற பயிற்சியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்காக வினைத்திறன் மிக்க தொடர்புசாதனத்திற்காக அரச தபால் வலையமைப்பு மற்றும் viber / whatsapp தொழில்நுட்ப பயன்பாடு தொடர்பிலான பயிற்சி செயலமர்வு | **09** | **09** | **389** |
| 02 | உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்காக கணணி பயன்பாடு தொடர்பிலான பயிற்சி செயலாமவு | **09** | **09** | **382** |
| 03 | உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்காக புள்ளிவிபர பாதுகாப்பு மற்றும் கணணி பயன்பாட்டின் சட்ட ரீதியிலான நிலைமைகள் தொடர்பில் அறிவுறுத்துவது தொடர்பான செயலமர்வு | **09** | **11** | **420** |
| 04 | உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்காக கணணி உள்ளீடு தொடர்பான சான்றிதழ் பத்திர பாடநெறி | **01** | **01** | **30** |

## பயிற்சி மற்றும் கற்கைப் பிரிவு

| இலக்கம் | செயலமர்வின் பெயர் | எதிர்பார்க்கப்பட்ட செயலமர்வு எணணிக்கை | நடாத்தப்பட்ட மொத்த எண்ணிக்கை | பங்கேற்ற பயிற்சியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | உள்ளூராட்சி ஆளுகை தொடர்பான உயர் டிப்ளோமா பாடநெறி 2016/2017 கற்கை ஆண்டு | **01** | **01** | **60** |
| 02 | உள்ளூராட்சி ஆளுகை தொடர்பான உயர் டிப்ளோமா பாடநெறி 2017/2018 கற்கை ஆண்டு | **01** | **01** | **65** |
| 03 | உள்ளூராட்சி ஆளுகை தொடர்பான உயர் டிப்ளோமா பாடநெறி 2018/2019 கற்கை ஆண்டு | **01** | **01** | **75** |
| 04 | உள்ளூராட்சி ஆளுகை தொடர்பான டிப்ளோமா பாடநெறி 2018/2019 கற்கை ஆண்டு | **01** | **01** | **75** |
| 05 | சமூக அபிவிருத்தி தொடர்பான உயர் டிப்ளோமா பாடநெறி 2018/2019 | **01** | **01** | **30** |
| 06 | மக்கள் பிரதிநிதிகளுக்கான உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான அடிப்படை சான்றிதழ் பாடநெறி | **02** | **02** | **74** |
| 07 | உள்ளூராட்சி மன்ற முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிறுவன இணைப்புச் செயலமர்வு | **04** | **04** | **40** |
| | பிரதேச பயிற்சி வேலைத்திட்டத்தின் இணைப்பு உத்தியோகத்தர்களுக்கான கூட்டம் | **04** | **04** | **250** |
| 09 | உள்ளூராட்சி மன்ற சஞ்சிகை - சிங்களம் / தமிழ் | **04** | **04** | அனைத்து உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் |
| 10 | பிரதேச பயிற்சி வேலைத்திட்டத்திற்கான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியினை வழங்குதல். | **45** | **50** | **2500** |

# 2018 ஆம் ஆண்டின் பயணத் திசைகள்

## வருடாந்த டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் விழா - 2018

உள்ளூராட்சி ஆளுகை தொடர்பான இலங்கை நிறுவகத்தினால் வருடாந்தம் சான்றிதழ்களை வழங்கும் நிகழ்வு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற மற்றம் விளையாட்டுத் துறை அமைச்சர் கௌரவ பைசர் முஸ்தபா, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் சம்பத் அமரதுங்க மற்றும் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் கமல் பத்மசிறி ஆகியோரின் தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் 2018 ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதி நடைபெற்றது. இதன் உள்ளூராட்சி மன்ற ஆளுகை தொடர்பான நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட டிப்ளோமா பாடநெறிகளை தொடர்ந்து பயிற்சியாளர்களுக்காக சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.


# 3.12. உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்

## அறிமுகம்

உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் 1916 இலக்கம் 22 கொண்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் கீழ் அரசாங்கத்தின் நிலையியற் சபை நிறுனமாகச் செயற்படுகின்றது. இந்நிதியம் தற்போது உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் நீண்ட கால வருமானத்தை ஈட்டல் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக நிதி உதவியினை வழங்கும் பிரதான அரச நிறுவனமாக செயற்படுகின்றது.

## நிதியத்தின் பிரதான பணிகள்

இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள 24 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 276 பிரதேச சபைகள் உட்பட 341 உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்காக தேவையான நீண்டகால நிதி வசதிகள் சலுகை வட்டியின் கீழ் வழங்குவது நிதியத்தின் அடிப்படை பணியாகும்.





## கடன் அங்கீகரித்தல் - 2018


| தொ.இல | உள்ளூராட்சி மன்ற நிறுவகம் | | செயற்திட்டம் | பெறுமதி |
|---|---|---|---|---|
| 01 | அனுதாரபுரம் | மா.ந.ச | இயந்திர உபகரணக் கொள்வனவு | 20,000,000.00 |
| 02 | கண்டி | மா.ந.ச | வாகன தரிப்பிடம் கொண்ட வர்த்தகக் கட்டடத் தொகுதி நிர்மானிப்பு | 1,000,000,000.00 |
| 03 | தெஹிவளை கல்கிஸ்சை | மா.ந.ச | வலையமைப்பு | 10,000,000.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 04 | ஜா-எல | ந.ச | தெருவிளக்குகளை பராமரிக்கும் வண்டி கொள்வனவு | 2,834,400.00 |
| 05 | திறப்பனை | பி.ச | வர்த்தகக் கட்டடத் தொகுதி நிர்மானிப்பு | 10,000,000.00 |
| 06 | கக்விமன | பி.ச | பெக்கோ லோடர் கொள்வனவு | 10,000,000.00 |
| 07 | கம்புறுபிட்டிய | பி.ச | சோளார் முறைமையினைப் பொருத்துதல் | 4,800,000.00 |
| 08 | பத்தேகம | பி.ச | பெக்கோ லோடர் கொள்வனவு | 9,600,000.00 |
| 09 | ஹக்மன | பி.ச | பெக்கோ லோடர் கொள்வனவு | 9,600,000.00 |
| 10 | கிண்ணியா | பி.ச | பெக்கோ லோடர் கொள்வனவு | 10,000,000.00 |
| 11 | தெஹியத்தகண்டிய | பி.ச | நகர பூங்கா | 4,000,000.00 |
| 12 | கஹடகஸ்திகிலிய | பி.ச | வர்த்தக கட்டடத் தொகுதி நவீன மயப்படுத்தல் | 4,625,200.00 |
| 13 | வலிகேபொல | பி.ச | நூலகக் கட்டட நிர்மானிப்பு | 19,920,000.00 |
| **மொத்தம்** | | | | **1,115,379,600.00** |

## கடன் வழங்குதல் - 2018

| தொ.இல | உள்ளூராட்சி மன்ற நிறுவகம் | | செயற்திட்டம் | பெறுமதி |
|---|---|---|---|---|
| 1 | பிங்கிரிய | பி.ச | பெக்கோ லோடர் கொள்வனவு | 7,000,000.00 |
| 2 | நீர்கொழுமபு | மா.ந.ச | நூலகக் கட்டட நிர்மானிப்பு | 6,526,000.00 |
| 3 | காரைதீவு | பி.ச | கலாசார மத்திய நிலைய நிர்மானிப்பு | 1,777,911.00 |
| 4 | வளப்பிட்டிய | பி.ச | மயான நிர்மானிப்பு | 1,252,971.00 |
| 5 | தெஹியோவிட்ட | பி.ச | பொருளாதார மத்திய நிலைய நிர்மானிப்பு | 1,794,665.00 |
| 6 | பசறை | பி.ச | வர்த்தகக் கட்டடத் தொகுதி நிர்மானிப்பு | 17,221,000.00 |
| 7 | நாவிதன்வெளி | பி.ச | பூதவுடல் கெண்டு செல்லும் வண்டி கொள்வனவு | 1,120,000.00 |
| 8 | நீர்கொழும்பு | மா.ந.ச | நூலகக் கட்டட நிர்மானிப்பு | 28,481,805.34 |
| 9 | கண்டி | மா.ந.ச | வாகனம் நிறுத்தும் தளத்துடன் சொகுசு வர்த்தகக் கட்டடத் தொகுதி நிர்மானிப்பு | 317,184,000.00 |
| 11 | அனுராதபுரம் | மா.ந.ச | இயந்திர உபகரணக் கொள்வனவு | 20,000,000.00 |
| 18 | கந்தகெட்டிய | ப.ச | வாராந்த சந்தை நவீன மயப்படுத்தல். | 783,800.00 |
| **மொத்தம்** | | | | **403,142,152.34** |





## பிரச்சார வேலைத்திட்டங்கள்

உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் சந்தைப்படுத்தல் பிரச்சார மத்திய நிலையமாக மாகாண சபை உள்ளூராட்சி மன்ற மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் ஒத்துழைப்புடன் கடன் சந்தை “எண்ணக்கரு” 2017 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டில் 3 கடன் சந்தைகள் வடக்கு, மத்தி மற்றும் தெற்கு மாகாணங்களில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டன.

## கடன் அறவீடு மற்றும் திறைசேரிக் கொடுப்பனவு




## கடன் அறவிடப்படாத செயற்திட்டங்கள்

அறவிடப்படாத கடன் தொடர்பில் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து மற்றும் பின்னூட்டல்களின் பயனாக ஆண்டு இறுதியில் அறவிடப்படாத கடன் விகிதாசாரத்தின் ஓரளவினை அறவிட முடிந்துள்ளது.

- 2018.01.01 ஆம் திகதியன்று அறவிடப்படாத கடன் செயற்திட்டம்

| | |
|---|---|
| முதலாவது காலாண்டு இறுதியில் அறவிடப்பட்ட அளவு | - 467,292,230.87 |
| இரண்டாவது காலாண்டு இறுதியில் அறவிடப்பட்ட அளவு | - - |
| மூன்றவாது காலாண்டு இறுதியில் அறவிடப்பட்ட அளவு | - - |
| நான்காவது காலாண்டு இறுதியில் அறவிடப்பட்ட அளவு | - 39,834,935.00 |
| நான்காவது காலாண்டு இறுதியில் அறவிடப்பட்டோர் | - 15,349,318.88 |
| அறவிடப்படாத கடன் நிலுவை விகிதாசாரமாக | - 11.82% |